5

முத்துச்சிப்பி

சூத்தக் கனையாழி

அன்னம் 33

● தீர்த்தக் கரையினிலே /
© கவிஞர் முருகுசுந்தரம் / முதற்பதிப்பு செப்டம்பர் 83 /
அச்சும் அமைப்பும் அகரம் சிவகங்கை / வெளியீடு
அன்னம் (பி) லிட்., சிவகங்கை — 623 560 / அட்டை-
யி. ஞானவேலு / விலை ரூபாய் 7-50

அக்கம் பக்கம்

நானும் என் கவிதையும் 3
உடைந்தகுழல் 9
கோப்பெருந்தேவியின் சிலம்பு—வாக்குமூலம் 34
கூண்டுப்புலி 39
கல்லூரிப் புதுக்கவிதை 41
கச்சு 44
கனவுகளின் ஊர்வலம் 45
கழுவ முடியாத களங்கம் 48
ஓர் இரங்கற்பா 50
சென்னையின் முகங்கள் 56
ஒரு மலரின் புலம்பல் 60
சாளரத்தின் சாபக் கேடுகள் 62
புல்லாங்குழல் 64
ஒலிபெருக்கி 65
பனித்துளி 68
நில நடுக்கம் 69
இலக்கிய பேரங்காடி 72
அங்கு செல் குதிரையே! 75
வானவில்துண்டே! வண்ணத்துப் பூச்சியே! 76
அரே ராம! அரே கிருஷ்ண! 78

○

நானும்
என் கவிதையும்...

○

ஆங்கில மேதை
பெர்னார்ட் ஷா விடம்
ஒரு நண்பர் வந்தார்.
ஷாவின் பழைய நூலொன்றைக் காட்டி
'இது நீங்கள் எழுதியதா?'
என்று கேட்டார்.

'உடற் கூற்றுக் கொள்கைப்படி
ஒருவன் உடம்பிலுள்ள அணுக்கள்
ஏழு ஆண்டுகளுக்கு ஒரு முறை
முழுமையாக மாறி விடுகின்றன.
அக்கொள்கைப்படி பார்த்தால்
இந்நூல்—
என் பாட்டனால்
எழுதப்பட்டது'—என்று
தமக்கே உரிய நகைச்சுவையோடு
விடையிறுத்தார் ஷா.

○

மறுபிறவியில்
எனக்கு நம்பிக்கையில்லை.
என்றாலும்—

ஒரு கவிஞன் தன் வாழ்நாளில்
பல பிறவி எடுக்கிறான் என்பதை
நான் நம்புகிறேன்.

கவிதைக்குப் கூடப்
பல பிறவிகள் உண்டு.
ஜெர்மானியப் பெருங் கவிஞன் 'கெதே'
'பாஸ்து' என்ற தன் பெருங் காப்பியத்தை
இருபது வயதில் தொடங்கிவிட்டான்.
தன் படைப்பைப் பலமுறை
திருத்தித் திருத்தி எழுதி
எண்பதாவது வயதில் முடித்தான்.
ஃபிட்ஜரால்டின்
'ருபாயியாத்' மொழிபெயர்ப்பு
மூன்று பிறப் பெடுத்தது.

பாரதிதாசனைப்போல்
எழுதுவது தான் என் முதற்குறிக்கோள்.
சுரதாவின புதிய உத்திகள்
இளங் கவிஞனாகிய என்னைப்
பெரிதும் வசீகரித்ததுண்டு.
இன்று—
நான் நானாக எழுதுகிறேன்.

கவிதை ஆற்றல் என்பது
பொதுவானது.

ஆற்றல் மிக்கவர்களே
மரபுக் கவிதையிலும்
புதுக்கவிதையிலும்
வெற்றி பெறுகிறார்கள்.

○

கவியரங்கம்
சில காலம் என்னை
ஆட் கொண்டது.
இது—
ஆற்றல் மிக்க ஓர் அரங்கப்படை.
புலவர்களின் சக்கர வியூகத்தைத் தகர்த்துப்
பொதுமக்களைக் கவிதையின் பக்கம்
இழுத்துச் சென்ற பெருமை
இதனையே சாரும்.

1968 முதல் 75 வரை
கவியரங்கின் பொற்காலம்.
கலைவாணர் அரங்கம்
நிரம்பிப் பிதுங்கும் அளவிற்குத்
தரமான சுவைஞர்கள் கூடினர்.
பட்டி தொட்டியெல்லாம்
புற்றீசல் போலப் பொதுமக்கள்
கவியரங்கத்தில் மொய்த்தனர்.

ஆங்கில நாளேடுகள்†—
விரும்பித் தலையங்கம் எழுதும் அளவுக்குக்
கவியரங்கம் விளம்பரம் பெற்றது.
கவிஞர்களாகிய எங்களுக்குப்

---

† The Muse of Tamilnadu—Indian Express.

புகழ் மயக்கம் தரும்
போதையாகவே இது மாறிவிட்டது.

ஆனால்...
தரமான கவிஞர்களின்
உண்மையான வளர்ச்சி தடைப்பட்டது.
கட்டுப்பாட்டுக்கும் கட்டாயத்துக்கும்
உட்பட்டுப் பாடியதால்
தரமில்லாத படைப்புகள் தோன்றின.
கவிதை சொற் சிலம்பமாகியது.

பல நூற்றாண்டுகள் பின்னோக்கிச் சென்று
பண்டை இலக்கியப் பாத்திரங்கள் பற்றித்
திரும்பித் திருப்பிக்
கீறல் விழுந்த இசைத் தட்டாய்ப்பாடி
இன்றைய சமுதாயப் பிரக்ஞையே
பல கவிஞர்களுக்கு இல்லாமல் போய்விட்டது.

○

கவிதையின் கருப்பொருள்
உயர் வானதாக இருக்க வேண்டும்.
கவிதையின் கருப்பொருள்
மட்டமானதாக இருந்தாலும்
அதன் பயனும்
அது வெளிப்படுத்தும் உணர்வுகளும்
மக்களினத்தை
உயர்த்துவனவாக இருக்க வேண்டும்.
கவிஞனாக இருப்பதில்
எனக்கும் பெருமிதம் உண்டு.
பெருமைக்குரிய கவிதையை
விளையாட்டுத் தனமாகப் பயன்படுத்துவதை
நான் வெறுக்கிறேன்.

○

கருத்தாழமும்
உணர்ச்சி அழுத்தமும் (seriousness)
கவிதையின் இருகண்கள்.

அந்த வெள்ளையன்—
என் தந்தையைக் கொன்றான்;
என் தந்தை பெருமிதம் மிக்கவர்!

அந்த வெள்ளையன்—
என் தாயைக் கற்பழித்தான்;
என் தாய் அழகி!

அந்த வெள்ளையன்—
பட்டப்பகலில்
என் தம்பியை எரித்தான்;
என் தம்பி வலியவன்!

அந்த வெள்ளையன் கைகள்
கருப்பு ரத்தத்தால் சிவந்திருந்தன;
வெற்றிக் குரலோடு அவன்
என்னைப் பார்த்துச் சொன்னான்:

'டேய் பையா!
ஒரு நாற்காலி
ஒரு கைக் குட்டை
ஒரு மதுப் புட்டி
கொண்டுவா!' — என்று†

---

† டேவிட் டியாப் எழுதிய 'நியாஇ' என்ற தென்னாப்பிரிக்கக் கவிதை.

அக் கொலைகார வெள்ளையன்
கருப்புச் சிறுவனைப் பார்த்துச்
சாவதான மாகச் சொன்ன
கடைசி வரிகளில் காணப்படும்
உணர்ச்சி அழுத்தம் என் குருதியில்
சில்லிப்பை உண்டாக்குகின்றது.

○

மனிதாபிமானம்—
இன்றும்
மகாகவிகளின்
'உடோபியா' வாகத்தான் உள்ளது.
காட்டு மிராண்டித்தனம்
'கம்ப்யூட்டர்' வடிவம் பெற்றிருக்கிறது.

அண்டை வீட்டுக்காரன் உடம்பு
காய்ச்சலால் சுடும் போது
உன்னுடம்பும் சுட வேண்டும்.
நீ குளிர்ந்த ஏதேன் தோட்டத்தில்
வீற்றிருந்தாலும்
அரேபியப் பாலையில் வீசும்
வெப்பக் காற்று
உன்னையும் தகிக்க வேண்டும்.†

என்பது போன்ற
மெல்லிய மனிதாபிமான உணர்வுகள்
இன்றைய கவிதையின் இதய நாதமாகி
மக்களினத்தை வழிநடத்திச் செல்லவேண்டும்.

---

†இந்த உருதுப் பாடலின் ஆசிரியர் மௌலானா அல்டாஃப் உசேன் அலி; இவர் கே. ஏ. அப்பாஸின் பாட்டனார்.

○

இன்றைய—
அரசியல் விளம்பரமோ
பத்திரிகை விளம்பரமோ
திரைப்பட விளம்பரமோ
ஒரு கவிஞனின் சிறப்பையும்
படைப்பின் தரத்தையும்
முடிவுசெய்யப்போவதில்லை.

ஒரு கவிஞனின் படைப்பு
இந்தச் சமுதாயத்துக்கு
எந்த அளவு பயன்படுகிறது
என்பதை வைத்துத்தான்
அவன் சிறப்பும்
அவன் படைப்பின் தரமும்
எதிர் காலத்தில்—
நிர்ணயம் செய்யப்படும்.

○

ஷெல்லி குறிப்பிட்டது போல்
'காலமே சிறந்த திறனாய் வாளன்!'
தீர்த்தக் கரையில் தொடங்கும்
என் கவிதை அணிவகுப்பு-
காலத்தின் தீர்ப்புக்கு அனுப்பப்படுகிறது.

●

முருகு

சுரோடு-3
24--8—83

○

உடைந்த குழல்

○

சில்வர் ஓக்குக் குடைகளை
விரித்த வண்ணம்
சேர்வராயன் மலை
சேலம் பொருட்காட்சியைப்
பார்த்துக் கொண்டிருந்தது.

அந்த நெடுங்கல் புற்றிலிருந்து
நீர்ப்பாம்புகள் ஊர்ந்துவந்து
மணிமுத்தாற்றில் கலந்தன.
வாழ்ந்து கெட்ட
செல்வனைப் போல்
மணிமுத்தாறு
தன் கையில் உருண்டு கொண்டிருந்த
சில்லறையை
எண்ணிப் பார்த்துக் கொண்டிருந்தது.

மலையிலிருந்து இறங்கிய
களைப்புத் தீர
மணிமுத்தாறு
மூக்கனேரியில் இளைப்பாறி விட்டு
மீண்டும் பயணத்தைத் தொடர்ந்தது.

மூக்க னேரி—
ஏர்க்காட்டுக் காரருக்கு
இலைமேல் பனித்துளி!
கண்ணங் குறிச்சிக்
காரருக்கோ பெரியகடல்!

அந்தத்
திரவப் பளிங்கில்
திருவடிகளைத் தோயவிட்டு,
தென்றலுக்குக் குலுங்கும்
தேன்மலர்க் கொத்தாகக்
குனிந்து நிமிரும்
அக் கோலமயில் யார்?
அவள்தான் பூஞ்சோலை.

அவள்—
புறவிதழைக் கிழித்துப்
புறப்பட்டு வெளிவந்து
அங்காந்த அகவிதழில்
ஆசைத் தேனை
நிரப்பிக் கொண்டிருப்பவள்.
வண்டு கோத
வளர்கின்ற வாலிபம்.
திட்டமிட்ட மேனிக்
கட்டளைக் கலித்துறை.

காலைக் கதிரில்
அவள் பேரூர்ச்சிற்பம்.
அந்தி நிழலில்
அவள் பிகாசோ ஓவியம்.

ஏகாலி நாகனுக்கு
அவள் இரண்டாம் மனைவி.
அவனுக்கு
அவள் விடியல்!
அவளுக்கு..?
அவன்...
மங்கிய மாலைப் பொழுது!

நாகன்—
நாள் தோறும்
சமுதாயத்தின் அழுக்கைத்தேடிச்
சலிப்பின்றித் திரிபவன்.
நாக்குத் தினவை
நடைபாதைக் கடையிலும்,
நரம்புத் தினவை
மூக்கனேரிப்
பிரம்புப் புதரிலும்
தீர்த்துக் கொள்பவன்.

கிடைத்ததைக்
கிடைத்த இடத்தில்
கிடைத்த சமயத்தில்
உண்டு வாழும் வாழ்க்கை
அவன் வாழ்க்கை.

பூஞ்சோலை—
சேலத்துச் செங்கான்
தன் சலவைக் கடையில்
பெட்டிபோட்டு மடித்த
பட்டுச் சேலை.
நகர நாகரிகத்தின்
சரிகை வேலைப்பாடுகள்
அவள் பொன் மேனியில்
இழையோடிக் கொண்டிருந்தன.

சுமைதாள முடியாமல்
கால்கள் வளைந்து
முட்டிதட்டிப்போன கழுதைபோல்
குடும்பச் சுமையால்
கூனிப்போன செங்கான்
சுவைச்சுமை மூட்டையான

பூஞ்சோலையை
நாகன் முதுகில்
செலவில்லாமல் ஏற்றிவிட்டான்.

மூத்தமனைவியை இழந்து
முதுமையின் வாசலை
எட்டிப் பார்த்துக் கொண்டிருந்த
நாகனுக்கு—
செங்காண் கொடுத்த
பொங்கல் இனாம் பூஞ்சோலை.

அந்த வட்டாரத்தில்
வட்டமிட்ட
இளவட்டங்களுக்கு
மூக்கனேரித் துறை
மோகினியாகக்
காட்சி தந்தாள் பூஞ்சோலை.

முழந்தாளுக்கு மேல்
தூக்கிச் செருகிய சேலையுடன்
மோவித் துணியைப் பிழியும்போது
சில குறும்புப் பார்வைகள்
தன் மேனியின்
மிருதுவான இடத்தில்
கம்பளிப் பூச்சிபோல் ஊர்வதை
அனாயாசமாகத் தட்டியெறிந்துவிட்டு
வேலையில் மூழ்கிவிடுவாள்.

காய்ந்த துணிகளைக்
கட்டி வைத்துவிட்டு,
சமமான எண்ணங்களோடு
குடிசை வாசலில்
குந்தியிருப்பாள் அவள்.

சேலம் சென்று விட்டு
இரவில்—
கூலியோடு திரும்பும் நாகன்
பட்டைச் சாராய நெடியுடன்
பழுத்த
நெருப்புத்துண்டக் கண்களுடன்
சூடேறிய சலவைப் பெட்டியாய்
வீட்டுக்குத் திரும்புவான்.

தெருக்கோடியில்
அவன் வரும்போதே
பூஞ்சோலை
இலைவிரித்துக்
காத்திருக்க வேண்டும்.
இல்லாவிட்டால்
கல்மாரி போல்
வசையும் அடியும்
கலந்து கிடைக்கும்.

சூடு தணிந்ததும்
அவிழ்த்துப் போட்ட
கட்டு மரமாய்
விடியும் வரை
கிடப்பான் நாகன்.

நாகனைப் பொறுத்தவரை
மனைவி—
ஒரு பஃபே உணவு.
நின்று கொண்டே
தின்று விட்டுத்
தட்டை வீசி எறிந்துவிடுவான்.

பூஞ்சோலைக்குக்
கணவன் ஒரு படையல்.
அமைதியாகப் பரிமாறி

ஆர்வத்துடன்—
பாராட்டிக் கொண்டே
சாப்பிட வேண்டும்
என்பது அவள் விருப்பம்.

ஆனால் நாகன்
எடுத்தது கண்டதும்
இற்றது கேட்கும்
இராமன் கைவில்!
பாவம்!
பூஞ்சோலை
பரிதாபத்திற்குரியவள்!

பூஞ்சோலையின்
பசியைப் பற்றி
நாகன் என்றும்
கவலைப் பட்டதில்லை!
அவளுக்குப்
பகலில் வறுமை!
இரவில் பஞ்சம்!

சில நாட்களில்
போதை தலைக்கேறத்
தள்ளாடி நடந்துவந்து
உடம்புச் சுமையைத்
திண்ணையிலேயே
வீசி எறிந்து விட்டுப்
படுத்துக் கொள்வான் நாகன்.

பூஞ்சோலை
வாசல்சிலையாகி
மூக்கனேரியின்
தண்ணீர்த் தகட்டையே
வெறித்துப்
பார்த்துக் கொண்டிருப்பாள்.

ஏரியின் வெறுமையும்
அவள் இதயத்தின் வெறுமையும்
கனத்த பனிப்படலமாய் நிற்க
அவள் உட்கார்ந்திருப்பதுண்டு.

ஒரு நாள்—
நிலவின் இரவுப்பகல்
பூஞ்சோலையின்
உணர்ச்சிகளில்
விழிப்பையுண்டாக்கியது.
மெல்லிய அவள் கனவுத்திரை
நாகனின் குறட்டையால்
படபடத்தது.

இதய இறுக்கத்தை
நெகிழ்த்துவிடக்
குடிசையை விட்டு
வெளியில் வந்தாள்.
நிர்வாண அமைதி
எங்கும் தொங்கிக் கொண்டிருந்தது.

இலைகள்
ஒன்றோடொன்று உராயும்
மெல்லோசை கூட
அவள் காதில் விழுந்தது.
அந்த அமைதியை
அங்கீகரித்த அவள்
மெதுவாக நடந்து வந்து
ஏரிக்கரையில் அமர்ந்தாள்.

சிறிய கல்லொன்றை எடுத்து
ஏரியில் போட்டாள்.

அதில் ஏற்பட்ட
நீர்ச் சுழிகளைப் போல்
அவள் உள்ளத்திலும்
வட்டங்கள் வளர்ந்தன.

வட்டக் கண்ணாடித் தொட்டியில்
விட்ட தங்க மீனாக
அவள் உள்ளம்
குறிக்கோள் இல்லாமல்
வளைய வளைய
வந்து கொண்டிருந்தது.

ஏதாவது ஒன்றில் மோதி
இடித்துக் கொள்ள
விரும்பியது அவள் உள்ளம்.
இடித்த போதெல்லாம்
நழுவி விழுந்தது.

இந்த ஏக்க விளையாட்டில்
அவள் ஈடுபட்டிருந்த போது
ஒரு மெலிதான இனிய ஓசை....
அவள் உடலில் சிலிர்ப்பு!

அவள் உள்ளத்தில்
ஓர் உணர்ச்சி ரேகை
புதிதாகத் தோன்றி
மெதுவாகப் படர்ந்துகொண்டிருந்தது.

இந்தச் செவிச்சுகம்
எங்குத் தடைப்பட்டுவிடுமோ
என்ற அச்சத்தால்
தன் தலையை மெதுவாக....
மிக மெதுவாகத் திருப்பி
நான்கு பக்கமும் பார்த்தாள்.
யாரையும் காணோம்.
அங்கு நிலவிய
அமைதிப் படலம்
மெதுவாகக் கிழிந்து கொண்டிருந்தது.

அவளது தனிமை
தகர்க்கப் பட்டாலும்
அந்த இனிமை
அவளுக்கு
இதமாகத்தான் இருந்தது.

மார்கழி மாதக்
குளிருக்கு அஞ்சினாலும்
குளிக்க விரும்பிக்
குளத்தில் இறங்கும்
பெண்ணைப் போல்
அச்சத்தோடு
அந்த ஓசையில் குளித்தாள் அவள்.

மூக்கனேரியின்
அக்கரையிலிருந்து
அந்த இசையலை
மிதந்து வந்து கொண்டிருந்தது.
நிலவு வெளிச்சத்தை
இசையாக மாற்றி
யாரோ ஒருவன்
புல்லாங்குழலின்
துளைகள் வழியாக
ஒழுகவிட்டுக் கொண்டிருந்தான்.

சர்க்கரைப் பாகைக்
கம்பிபதத்தில்
நீட்டுவதைப் போல்
இசையணுக்களைக்
கோவை செய்து
நீட்டிக் கொண்டிருந்தான்.

பூஞ்சோலைக்கு
இசை நுணுக்கம் தெரியாது.

என்றாலும்—
மகுடிக்குக் கட்டுப்பட்ட
நாகம்போல்
மயக்க உணர்வில்
அமர்ந்திருந்தாள் அவள்.

குட்டி நாய்
குரைப்பது போல்
குடிசையில் இருந்து
கொக்கி இருமல் ஓசை!

உணர்ச்சிகள்
உறைந்து போன
நாகன் நெஞ்சில்
இந்த ஈழைப் பனிப்பாறை
எப்போதாவது
அடைத்துக் கொள்ளும்.
அப்போது—
ஆயிரம் முறை
அழைப்பான் பூஞ்சோலையை!

ஆவி பிடித்து
வேது கொடுத்து
அவன்
ஆவியை மீட்டுவருவாள்
இந்தச் சாவித்திரி.

□

அடுத்த நாள் இரவு
பாதி திறந்த
அவள் சிப்பி விழிகள்
அரைத் தூக்கத்தில்
ஆழ்ந்து கொண்டிருந்தன.

மீண்டும் அந்த
மெலிதான இசை
தென்றலில் மிதந்து வந்து
அவள் செவிப்பறையில் மோதியது.

அந்தக் காந்த இசை
அவள் ஆவியில் கலந்து
இரத்த நாளங்களில் பரவி
மயிர்க் கால்களில்
கொப்பளித்தது.
அவளுக்கு
இருகைகை கொள்ளவில்லை.
எழுந்து வெளியில் ஓடிவந்தாள்.

உடம்பே காதாக
எவ்வளவு நேரம்
அவள் நின்றாளென்று
அவளுக்கே தெரியாது.
திடீரென்று
அதன்தனைசேர்நின்றது.
திகைத்தாள் பூங்சோலை.

ஏன் நின்றது?
ஏன் நின்றது?
என்று அவள்
இதழ்கள் படபடத்தன.
தயக்கத்தோடு
தாள்கள் தரையைத்தடவ
அவள் குடிசைக்குள் நுழைந்தாள்.

□

அடுத்த நாள்
அவள் அல்லி விழிகளை
இமைக் கதவுகள்
மூட மறுத்தன.

அறுபட்ட
பழைய கனவின்
தொடர்ச்சிக்குக்
காத்திருப்பது போல்,
அவள் ஏக்க விழிகள்
தூங்காமல்
தூங்கிக் கொண்டிருந்தன.

இன்றும் அந்த இசை
இரவின் இடைவேளையில்
அவள் குடிசைக் கதவில்
மோதி எதிரொலித்தது.

தலைமை யாசிரியர்
வகுப்புக்குள் நுழைந்ததும்
அவசர அவசரமாக
எழுந்து நிற்கும் மாணவனைப் போல்
அவள் வாரிச் சுருட்டிக்கொண்டு
எழுந்து நின்றாள்.

உடனே—
அவள் விழிப்புறா
தன் இமைச்சிறகுகளை
வேகமாக அடித்துக் கொண்டது.

அவளையும் கேட்காமல்
கால்கள் அவளை
வாசலில் கொண்டுவந்து
நிறுத்தின.

அந்த இசை
இன்று அவளுக்கு
வேறு விதமாக இருந்தது.
ஏர்க்காட்டு
மலைச் சாரல் பூக்களைப்போல்
அதில் எத்தனையோ வேறுபாடுகள்!

வெள்ளி நிலா இரவில்
விளையாடும்
வெண்மேகங்கள் போல்

அந்த இசை
தன் உருவத்தை இன்று
அடிக்கடி மாற்றிக் கொண்டிருந்தது.
அவள் கால்கள்
தாளம் போட்டன.

குடிசைக்குள் கிடக்கும்
அழுக்குத் துணிகளை
எடுத்து வந்து
ஏரித்துறையில் நின்றுகொண்டு
சோ...உம்... சோ...உம்
என்ற தன் பக்க மேளத்தோடு
துவைக்கலாமா?—
என்று கூட
அவள் உள்ளம் பரபரத்தது.

அந்த இரவின்
இதயத்திலும்
யாராவது தன்னைக்
கண்காணிக்கிறார்களா என்று
ஒரு முறை
அச்சத்தோடு
நோட்டம் விட்டுவிட்டு,
மெதுவாக
உடம்பை நெளித்து
ஆடத் தொடங்கி விட்டாள்.
அந்த இசைக் கயிற்றில் சிக்கி
ஆடுகின்ற சூத்திரப் பாவையாக
ஆனாள் பூஞ்சோலை,

ஓ...
அந்த இசை...
அந்த இசை...
இப்போது....
ஏன் இப்படி ஒலிக்கிறது?
இதில் இப்போது
ஒரு வெதுவெதுப்பு!

ஒரு மயக்கம்...
ஒரு கிறக்கம்
கலந்தல்லவா வருகிறது!

நாகன் ஒருநாள்
அவளை வற்புறுத்திக்
குடிக்க வைத்த போது
அவள்—
உடம்பிலும்
உள்ளத்திலும்
ஏற்பட்ட மாற்றம்
ஒருவிதத் தலைசுற்றல்
எல்லாமே இப்போது
அவளுக்கு ஏற்பட்டது.

சானும் அந்த
இசையில் இசையாக
மயக்கத்தில் மயக்கமாகக்
கலந்து விட்டால் என்ன?
என்ற உந்துதல்
அவளை ஆட்டிப் படைத்தது.

அன்று ஒரு நாள்
ரோமாபுரியில்
எலிகளையும்
இளஞ்சிறுவர்களையும்
இழுத்துச் சென்ற மந்திரக் குழல்போல்
இவளையும் அந்தப் புல்லாங்குழல்
இழுத்துச் சென்றது.

ஆற்றில் வெள்ளம்
அதிகரித்து
ஊன்றியிருந்த
கால்கள் நழுவி
ஆற்றோடு போவதுபோல்
அவளும் அந்த
இசையோடு போனாள்.

இசை நின்றது.
நீந்தத் தெரியாத அவள்—
ஏரிக்குள்—
இடுப்பளவு தண்ணீரில்
நின்று கொண்டிருந்தாள்.

அந்த இசை...
இன்னும் சிறிதுநேரம்
நீண்டிருந்தால்....!
அவளுக்கு
அச்சத்தால் உடம்பு
சில்லிட்டுப் போயிற்று

அடுத்தநாள்
பகற் பொழுதெல்லாம்
அந்த இசைப்போதையில்
அவள் தள்ளாடிக் கொண்டிருந்தாள்.
குடிகாரன்
மீண்டும் குடிக்கும் நேரத்தை
ஏக்கத்தோடு
எதிர்நோக்கியிருப்பதுபோல்
இரவையவள்
எதிர் நோக்கியிருந்தாள்.

நள்ளிரவில்
நாகனுடைய தூக்கத்தை
அவன் குறட்டையால்
அளந்து பார்த்துவிட்டு
அவள் வெளியேறினாள்.

அந்த இசையில்
அவளுடம்பு இலேசாகிக்
காற்றில் மிதப்பதுபோல்
மிதந்தாள் அவள்.

ஏரிக் கரையடைந்தாள்.
எங்கும் இசை வெள்ளம்.

சிக்கல்—
சிந்தனையைக்
கூர்மை செய்கிறது.
உணர்ச்சி வெறி
உயிரைத் தூசாக்குகிறது.

கரையோரத்தில்
கவிழ்த்து வைத்திருந்த
வாயகன்ற
வெள்ளாவிப்பானை
அவள் கண்ணில் பட்டது.
அதைக் கவிழ்த்து
ஏரிநீரில் மிதக்க விட்டாள்.

மிதக்கும் அந்த
மிருச்ச கடிகையை
இருகையால் அணைத்த வண்ணம்
எதிர்க்கரை நோக்கி மிதந்தாள்.

நீரில் ஊறியும்
கரையாத தன்
சர்க்கரை மேனியோடு
அக்கரை ஏறினாள்.
எதிரில்—
சதைச் சுவைமேனிக்
கனிகள் குலுங்கும்
மாந்தோப்பு.
தோப்பில் நுழைந்தாள்.

அவ்விசை—
ஒவ்வொரு மாமரத்திலும்
எதிரொலித்தது.
மாங்குயிலின்
நெருப்புக் குரலோ
என்று வியப்போடு பார்த்தாள்.

மாங்குயிலின்
நெருப்புக் குரலோ
என்று வியப்போடு பார்த்தாள்.

கல்லிடுக்கில் புறப்பட்டுத்
தரைமின்னல் போல
வெள்ளி அருவியொன்று
ஓடிவந்து அவளுக்குக்
குறுக்கே பாய்ந்தது.
அந்த அருவியிசையோ என்று
ஐயத்தோடு நோக்கினாள்.

இல்லை! இல்லை!
அந்த இசை அவளை
மேலும்...
மேலும்....
இழுத்துச் சென்றது.

பள்ளிக்குச் செல்லும்
புதிய வாத்தியாரம்மாளின்
பட்டுக் குடைபோலப்
பூவாகவே நிற்கும்
குட்டைக் கொன்றை மரத்தடியில்
ஆமை முதுகு போன்ற பாறை,
நிலவு வெளிச்சத்தில்
கொன்றை மரம்
தன் நிழல் வலையை
அப்பாறை மீது
விரித்திருந்தது.

பூஞ்சோலை
அப்பாறையின் எதிரில் வந்து
நின்றாள்.
இசையும் நின்றது.
ஏதோ ஓர் உருவம்

இடம் பெயர்ந்து
அசைந்து
எழுந்து நின்றது.

அவ்வுருவம்—
அடியெடுத்து
வைக்கும் போதெல்லாம்
ஆணியடிப்பது போன்ற ஓசை.

தண்ணீரால் நனைந்திருந்த
பூஞ்சோலையின் உடம்பு
வியர்வையால்
நனையத்தொடங்கியது.
வந்த வழியில்
திரும்பி ஓடினாள்.

நின்ற அந்தக்
காந்த இசை
மீண்டும் எழுந்தது.
அவள் நின்றாள்.
அந்த உருவம்
அவளை நெருங்கியது.
காற்றின் அசைவுக்குத்
திரும்பும் மாந்தளிர் போல்
அவள் திரும்பினாள்.

எதிரில்...
ஒருகால் இழந்த
ஒரு காளை
காமத்துப் பாலின்
குறள் வெண்பாப் போலப்
புன்சிரிப் போடு
நின்று கொண்டிருந்தான்.

'நீங்கள்...'
என்று அவள் கேட்க

வாய்திறந்ததும்,
'கோவாலு!
மாந்தோப்பின்
இரவுக் காவல் காரன்'—
என்றான் அவன்.

'நான் பூஞ்சோலை!'— என்று
அவசரமாகச்
சொன்னாள் அவள்.
சில உணர்ச்சிமயமான
மௌன மணித்துளிகள்!

அக்குளில் அவன்
ஊன்றிக் கொண்டிருந்த
மரக்கட்டையை எடுத்துவிட்டு,
அவனைத் தன்
தோளில் ஏந்திக்கொண்டாள்.
அவன் அவளைத் தன்
இதயத்தில் ஏந்திக்கொண்டான்.
மாவிலை மெத்தை
அவர்களை வரவேற்றது.

□

அவர்கள்
ஒரு புதிய காதல் காவியத்தை
முத்தத்தால் எழுதத் தொடங்கினர்.
காதைகள் நீண்டன.
ஆனால்—
காப்பியத்தை முடிக்க
அவர்கள் விரும்பவில்லை.

□

பருவந்தவறித்
தப்புக்காய் காய்ப்பதைப் போல்
நாகனுக்கு
அன்று திடீர் விருப்பம்.

சேலம் பொருட் காட்சி
பார்த்து விட்டு,
சென்ட்ரல் விக்டோரியாவில்
சிவப்பு மல்லி
பார்த்து விட்டு,
சிவசக்தி விநாயகாவில்
சிவந்த முறுகல் தோசை
சாப்பிட்டு விட்டு
வரலாம் என்று
அவளைக் கூப்பிட்டான்.

அவளுக்கு முன்பெல்லாம்
அவை பிடித்தன;
இன்று கசந்தன,
மறுத்து விட்டாள்.

அன்று நாகன்
கயிற்றுக் கட்டிலில்
புரண்டு கொண்டிருந்தான்
அவள்—
கட்டாந்தரையில்
நெளிந்து கொண்டிருந்தாள்.

அந்த மௌன நாடகம்
நள்ளிரவு வரை நீடித்தது.
நாகனின்
குறட்டை நாயனம்
தனது ஆலாபனையைத்
தொடங்கியது.

கோவாலு
குயிலைப் போல்
வா...வா...வவ்வா...
என்று—
புல்லாங்குழலில்
இசை யெழுப்பிக் கொண்டிருந்தான்.

தனது ஆற்றாமையை
அவன் அப்படித்தான்
மொழி பெயர்ப்பது வழக்கம்.

பூஞ்சோலை
அன்று ஏரியைச் சற்று
வேகமாகவே மிதந்து
கடந்தாள்.

அன்று
சுடர் சற்றுப்
பெரிதாகவே எரிந்தது.
எண்ணெய் தீர்ந்து
திரியும் பற்றி எரிந்து
சாம்பலாக உதிர்ந்தது.

கொக்கி இருமலின்
குரைப்புத் தாங்காமல்
விழித் தெழுந்த நாகன்
பக்கத்துப் பாயல்
காலியாக இருப்பதைப்
பார்த்தான்.
வெள்ளாவிப் பானைத்
தெப்பத்தில் மிதந்து வந்த
புள்ளி மானைக் கண்டான்.
வைக்கோல் போரில் பற்றிய
தீயாக எழுந்தான் நாகன்.
பதற்றத்தோடு
படம் விரித்த நாகன்
சிறிது சிந்தனைக்குப்பின்
படத்தைச் சுருக்கிக் கொண்டான்.

குடிசைக்குள் நுழைந்த
இரவிவர்மாவின்
நனைந்த ஓவியத்தைப் பார்த்து
'என்ன இப்போது குளியல்'
என்று கேட்டான் அவன்.

'தூரம்' என்றாள் அவள்.
'ஆமாம்! நீண்ட தூரம்!'
என்று கூறிவிட்டுத்
திரும்பிப் படுத்துக் கொண்டான் அவன்.

□

அடுத்த சில நாட்கள்
மோப்பம் பிடிக்கும்
வேட்டை நாயாகத்
திரிந்து கொண்டிருந்தான் நாகன்.
பகலை இரவாக்கி
இரவைப் பகலாக்கிக்
கொண்டிருந்தான் அவன்

வடமீனைப் போல்
சிவந்த அவன் போதைவிழியும்
வடுப்பட்ட அவன் சிந்தனையும்
இரவில் விழித்துக் கொண்டிருந்தன.

வேலைகளை முடித்துவிட்டு
உப்புக் காற்றில் பொரிந்த
மாமல்லபுரச் சிற்பம்போல்
குடிசை வாசலில்
உட்காந்திருந்தாள் பூஞ்சோலை.
தன் புறவிழிகளால்
அகத்தின் ஆழத்தைப்
பார்த்துக் கொண்டிருந்தாள்.

மாணிக்கம் பதித்த
மரகத மேனிச்
சேர்வராயன் மலையையும்

அதன் கொண்டையூசிப்
பாதை வளைவில்
ஊர்ந்து செல்லும்
வண்டு வாகனத்தையும்

தண்டுவலைக் காவடியில்
பலாப்பழங்களை
ஏற்றிக் கொண்டு
பௌதீகத் தராசின்
நடுத் தண்டைப்போல்
நிமிர்ந்தபடி மலைச்சரிவில்
நிற்காமல் ஓடிவரும்
மலையாளியையும்

நிற்கும் மலை
தன் காலடியில் கழற்றிவிட்ட
செருப்பாக
அடிவாரத்தில் காட்சிதரும்
காப்பிக் கொட்டைத்
தொழிற் சாலையையும்

மலைச் சாரல்
படப்பிடிப்பை முடித்துக்கொண்டு
வாடகையோடு திரும்பும்
கல்லாங்குத்து
முள்ளங்கிகளையும்
மொபட் வண்டியில்
கல்லூரி சென்று திரும்பும்
ஐயர் வீட்டுப் பெண்ணின்
ஆண்பிள்ளைத் தனத்தையும்

பூஞ்சோலை
திருமணமான புதிதில்
அகல விழிகளால் பார்த்துப்
பொழுதைப் போக்கிய துண்டு.

இன்று அவையெல்லாம்
சிறு பிள்ளைகள்
சுவரில் கிறுக்கிய
கரிக் கோடுகளாய்
அவள் கண்ணில் பட்டன

நகரும்
நத்தை இரவுகளை
நடுக்கத்தோடு கழித்தாள்.
கோவாலுவின்
ஏக்கக் குழலோசை
சூட்டுக் கோலாக
அவள் நெஞ்சில் விழுந்தது.

அன்று இரவு—
தூங்குவது போல்
பாசாங்கு செய்தான் நாகன்.

உள்ளக் குதிரை
கடிவாளமில்லாமல்
தலை தெறிக்க ஓட
அவளும் ஓடினாள்.
பானைத் தெப்பத்தை
அவசரமாக மிதக்கவிட்டாள்.

நெத்தினி மீன்குழம்பும்
பிட்டும் நிரப்பிய
தூக்குப் போசியை
வாயில் கவ்விக்கொண்டு
வேகமாக மிதந்தாள்.

கன்னிமாடக் கரும்பைக்
கடித்துச் சுவைப்பதற்கு
நடுக்கும் நள்ளிரவில்
கிரேக்கக் கடலைக் கடந்துசென்ற
வியாண்டரின் துடிப்பு
இன்று அவளிடம் காணப்பட்டது.

என்ன இது!
பாதி வழியிலேயே
அவள் பானைத் தெப்பம்
கரையைத் தொடங்கிவிட்டது!

பாவம்!
அவளுக்குத் தெரியுமா?
அவளைப் பழிவாங்க
அன்று நாகன் மாற்றிவைத்த
பச்சைக் களிமண்
பானை அதுவென்று?

குண்டு பாய்ந்த
கொழுத்த வரால் மீன்
தண்ணீர்ப் பரப்பில்
தலை கீழாகப் புரள்வதுபோல்
புரண்டாள் பூஞ்சோலை,
தண்ணீரைக் குடித்தாள்!
தத்தளித்தாள்!
ஆழத்தில் அவள்
அழுந்திக் கொண்டிருந்தாள்.

அப்போது—
இரண்டு இரும்புக் கரங்கள்
அவளை இறுகத் தழுவின.
ஒற்றைக் காலில் நீந்திவந்து
ஓய்ந்து போன
கோவாலுவின் கரங்கள் அவை.

அடுத்தநாள்—
பின்னிய கொடிகளாக
இரண்டு பிணங்கள்
மூக்கனேரிக் கரையில்
ஒதுங்கிக் கிடந்தன.
உடைந்த
புல்லாங் குழலொன்று
அருகில் கிடந்தது.

அப் பிணங்களைப்
பார்த்துச்
சிலர்....
கண்ணீர் விட்டனர்.
சிலர்...
காரி உமிழ்ந்தனர்

○

கோப்பெருந்தேவியின் சிலம்பு—வாக்கு மூலம்

○

[வஞ்சிப்பத்தனால் கள்ளத்தனமாகக் கடத்தப்பட்ட கோப் பெருந் தேவியின் காற்சிலம்பு என்ன ஆயிற்று என்பது பற்றிச் சிலப்பதிகாரத்தில் எந்தச் செய்தியும் இல்லை. கொலைக்களப்பட்ட கோவலன் குற்றமற்றவன் என்பதை உணர்ந்த மதுரை நகரம், பாண்டியன் நெடுஞ்செழி யனைக் குற்றவாளிக் கூண்டில் ஏற்றுகிறது. இக்கற் பனை வழக்கு மன்றத்தில், காணாமற் போன கோப் பெருந்தேவியின் காற்சிலம்பே நேரில் வந்து வாக்கு மூலம் வழங்கினால் .]

நான்—
பாண்டிமா தேவியின்
படுக்கையறை முரசு!

மெருகு குலையாத நான்
அருகிலிருக்கும் பிறபொருள்களை
என்பொன் மேனியில்
பிரதிபலித்துக் காட்டுவேன்.
ஆனால்—
பாண்டிமா தேவி
அணிந்து கொண்ட பிறகு
அவள் பளிங்குக்கால்
என்னைப் பிரதிபலித்தது.

நள்ளிரவில் நான்செய்த
ஆர்ப்பாட்டம் பொறுக்காமல்

வாணியம்பாடி இசுலாமியக்
கல்லூரிக் கவியரங்கம்.

செம்பொன் பேழையில்
அரசி என்னைச்
சிறைப்படுத்தி வைத்தாள்.

நான்—
ஒரே கருவில்
பல முத்துக்களைச்
சுமந்து கொண்டு
பாடித்திரியும்
பசும் பொன் சிப்பி.
ஒருவரும் பார்க்காத நேரத்தில்
முத்துக் குளிப்பதுபோல்
வஞ்சிப்பத்தனும் என்னை
மூச்சடைக்கித்தான்
எடுத்துச் சென்றான்.

நான்—
அரசமா தேவியின்
அடிகளில் பொருத்தப்பட்ட
அபாய அறிவிப்பு
அவள்—
அவசரப்படும் போதெல்லாம்
அலறி அலறி
எச்சரிக்கை விடுவது
என்றன் வழக்கம்

எச்சரிக்கும் நான்
இல்லாத காரணத்தால்
அரசியின் அவசரம்
கோவலன் தலையைக்
கொய்து விட்டது.

கம்மியனால் கடத்தப்பட்டு
வேலைப்பாடு தெரிந்த அவனால்
வேதனையோடு கற்பழிக்கப்பட்டுத்
தீவினைக் கருவைத்
தெரியாமல் மறைத்துத்
திரிந்து கொண்டிருந்த நான்,

மனச்சாட்சியால் உந்தப்பட்டு
இந்த மன்றத்தில்
ஏறி நிற்கிறேன்.

பெண்களின்—
காலிலே விழுந்துகிடக்கும்
என்னைப்போன்ற ஒருத்தி,
ஆடவன் ஒருவன்
கையிலே விழுந்தால்
என்ன ஆவாள் என்பதற்கு
நானே சான்று,

மின்னலைப் பிடித்து
மடியில் கட்டி
மறைக்க முடியுமா?

விலைமதிப்பற்ற என்னை
மூடி மறைக்க
முடியாத கம்மியன்
வேந்தன் கவனத்தை
வேறுபக்கம் திருப்ப
இந்த நாடகம் ஆடிவிட்டான்.

பாண்டியனும் கோவலனும்
பள்ளிகொள்ளும் அவசரத்தில்
என்னுடைய
படுக்கை மாறிவிட்டது.
உண்மையை நான்
உணர்ந்திருந்தும்
அகலிகை போல்
பேசாமல் இருந்துவிட்டேன்.

நான்—
பாஞ்சாலியாக இருந்திருந்தால்
படுக்கை மாற்றம் பற்றிக்
கவலைப்பட்டிருக்க மாட்டேன்.
உள்ளம் உறுத்தியதால்
உண்மையைக் கூற
நானே வந்துவிட்டேன்.

நான்—
சந்தனத்தில் புதைந்தமலர்.
எவ்வளவு நாள்
சாக்கடைச் சேற்றைச்
சகித்துக்கொண்டிருக்க முடியும்?
வெளியேறி வந்துவிட்டேன்.

முட்டையைக் கூடத்
தட்டித் தட்டித்தான்
உடைக்கிறோம்.
கோவலன் உள்ளத்தைத்
தொட்டுப் பார்க்காமலேயே
உடைத்துவிட் டீர்களே!

கூவலைக்
கேட்க அஞ்சிச்
சேவலின் குரல்வளையை
முறித்துவிட் டீர்களே?

ஐயனார் கோவிலில்
வெட்டப்படும்
பலிக்கடா கூடத்
தலையில் தண்ணீர்
தெளிக்கப்பட்டுத்
தலையைத் துலுக்கி
ஒப்புதல் கொடுத்தால்தான்
வெட்டுவார்கள்!
பாவம்!
பூம்புகார்ச் செல்வனுடைய
தலையின் விலை
இவ்வளவு
மலிவாகி விடுமென்று
கனவிலும் நான்
கருத வில்லை.

நீதிமன்றம்
ஆக்கும் தீர்ப்புக்குக்

குற்றவாளியின்
வாக்குமூலம் தானே கரை?
கோவலன் வழக்கில்
கரையில்லாமல்
வெள்ளம் பாய்ந்திருக்கிறது!

வணக்கம் நடுவரே!
சையமர்த்த வேண்டாம்!
நானே—
முடித்துக் கொள்கிறேன்.

கூண்டுப்புலி

◆

தளை போடப்பட்ட
அந்தத் தசைமின்னல்
கம்பிக்கூண்டுக்குள்
கட்டவிழ்த்து விடப்பட்டிருந்தது.

ஒரு புள்ளியில்
ஊன்றி நின்று சுற்றும்,
கனரகப் பல்சக்கரமாக
அது சுற்றிவந்தது.

ஓர் அற்பமனிதன்
அதட்டும் குரலோடு
ஒரு தடியை ஓங்கியபோது,
ஒரே பருப்பாக வளர்ந்த
ஊட்டி உள்ளிப்பூண்டுப் பல்லைக்
காட்டி உறுமிவிட்டுத்
தன் துடுப்புக்கையால்
அத்தடியை
வேகமாக அறைந்துவிட்டுத்
தன் கண்களைச் சுருக்கி
அவனைத் துச்சமாகப் பார்த்தது.
பாய நினைக்கிறதோ?

உடனே—
அதன் பார்வை மாறியது,
எங்கும்
ஆயிரமாயிரம் கம்பிகள்
அதன் விழித்திரையில்
அணிவகுத்து நின்றன.

கண்களை
ஒரு முறை கசக்கிவிட்டு
அந்தக்
கம்பிக்கனவைக் கலைக்க
அதுமுயற்சி செய்துகொண்டிருந்தது.

○

கல்லூரிப்
புதுக் கவிதை

○

நீ இதழ் இயல்
தசை இசை
நாண நாடகம்!

நீ தழுவு தொடர்
முத்தகப் பாட்டு
நீ மாலைக்கலி
சேலைச் சிந்தாமணி!

உன் கண்கள்—
நினைவு நாடகத்தின்
வெளிச்ச விளம்பரங்கள்!
வானத்து நீலநிறம்
பகலில்
உன் கண்களில் வந்து
பள்ளி கொள்கிறது;

உன் குரல்
இசைப் படுத்தப்பட்ட
கிண் கிணி ஓசை.
குயில்கள்
குரலொடுங்கும் கார்காலத்தில்
உன் குரல்வளையில் குடியேறி
இசைப்பயிற்சி பெறுகின்றன.

உன் கூந்தல்
அலைக் கனவுகள்.
தொங்கும் வரிப்பாடல்கள்!
நீ ஆடை இலக்கணத்தை
அகற்றிய புதுக்கவிதை.
உன் மேனி—
பன்னீரின் திடவுருவம்.
பளிங்கின் இளகல்!

உன் பேச்சு
சர்க்கரையின்
பூரித கரைசல்.
உன் பெருமூச்சுப் பட்டால்
வேதியல் ஆய்வுக் கூடத்தின்
எரிவாயு
உடனே தீப்பற்றிக் கொள்ளும்.

உன் பாதகமலங்கள்
கல்லூரி வாயிலை

முத்தமிடும் போது—
போக்கு வரத்து
ஸ்தம்பித்து
அடிக்கடி ஏற்படும்
விபத்துக்களைத்
தடுக்க முடிவதில்லை!

விழிகளைக்
குருடாக்கும்
அழகு வெளிச்சமே!
உன்னை இப்படிப்
பாதையில் போகவிட்ட
இரக்க மற்ற
கொடியவர் யார்?

ஊம்...
உன் மீது தவறில்லை!
உன்னை—
இப்படிப் போகவிட்ட
உன் பெற்றோர் மீதும்
தவறில்லை.
'ஆபத்து வருகிறது'—என்று
முன்னறிவிப்புச் செய்ய
பைலட் வண்டியை
அனுப்பாத
தமிழக அரசே தவறுடையது.

கச்சு

நான் தனவான்;
இல்லாதார்க்கு
அள்ளிக் கொடுக்கும்
வள்ளல் பெருமான்!

நெருக்கடி நிலை
எனக்கு
எப்போதும்
பிரகடனப் படுத்தப்பட்ட
பொதுச் சட்டம்.
இரவில் மட்டும்
அது தளர்த்தப்படுகிறது.

என்னை நம்பியவர்களை
நான்—
எப்போதும் கைவிடுவதில்லை.

○

கனவுகளின்
ஊர்வலம்

○

தென்றல் அசைக்க
அசைந்தாடும் தாமரையே!
நீ ஆடு! ஆடிக்கொண்டே இரு!

கலைந்து கலைந்து தோன்றும்
கனவுகளின் ஊர்வலமே!
அலைகளே உடம்பாய்
அசைகின்ற பொன்மயிலே!
நீ உன்
ஆடலை நிறுத்தாதே!
என் உயிர்த்துடிப்பே
நின்று விடும்!

கண்ணன்
பரம பதம்!
நீயோ
பரத பதம்!

இதயம் எங்கோ
உடம்புக்குள் இருப்பதாக
எண்ணி ஏமாந்தேன்.
விரல் நுனியில் அன்றோ
உன் இதயம் பேசுகிறது.

உன் முகம்
நொடிக்கு நொடி
காட்சிகளை மாற்றும்
வண்ணத் திரைப்படம்.
உன் உடம்பே
சுழலும் நாடக அரங்கம்.

உன் அடிகள்
ஆயிரம் கற்பனைகளை
அடுக்கி வைத்துச்
சதங்கை நாக்கில் பாடும்
சந்த இசைப்பாட்டு.

பார்ப்பவரின்
நெஞ்சங்களை யெல்லாம்
உன் பாதச் சதங்கைகள் ஆக்கும்
பரத ராணி!
அழகுக் கலையின்
அலாரிப் பே!
நடுங்கும் நாத இன்பமே!

ஆடித்திரிதல் கண்டால்
உன்னைப் போய்
ஆவி தழுவுதடி—
என்றான் பாரதி.
ஆனால்—
என்னாவி உன்னில்
ஐக்கியமே ஆகிவிட்டதடி!

மாட மதுரையில்,
உலகத் தமிழ்
மாநாட்டு மேடையில்
நீ—

பெரியாழ்வார் பாசுரத்துக்கு
அபிநயம் பிடித்தபோது
அந்தக் கண்ணன் மட்டுமா
உன் கையில் குழந்தையானான்?
நானுந்தான்!!

தென்றல் அசைக்க
அசைந்தாடும் தாமரையே!
நீ ஆடு!
ஆடிக் கொண்டே இரு!

நாத்ரு தீம்தீம் தன்னாம்
தீந்தநா—
நாத்ரு தீம்தீம் தன்னாம்.

கழுவ முடியாத களங்கம்!

கடல் சூழ்ந்த
இங்கிலாந்தே!
கடவுள் உன்
அரசியைக் காப்பாற்றட்டும்!

உன்பேரரசில்
கதிரவன் தன்
கதிர்களைச் சுருக்காத
காலம் ஒன்றிருந்தது.

நீ கடலரசி!
உன் கப்பல்கள்
ஆழக் கடலின்
வயிற்றைக் கிழித்து
அகிலத்துக்கே
பாதை யமைத்தன.

ஷாவும்
சர்ச்சிலும்
உன் வரலாற்றுப்பாதையில்
எழுத்த
வண்ண வளைவுகள்!

ரோமியோ ஜூலியத்தை
சுவர்க்க இழப்பை
எழுதிய உன் கைகள்—
கனவுகள்
கோலமிடும் கண்களோடும்,
காதல் கசிந்த
இதயத் தோடும்

திருமணத் துக்காக வந்த
இந்தியப் பெண்ணின்
கன்னித் தன்மையை,
இலண்டன் விமான நிலையத்தில்
சோதனை புரிந்து
கழுவ முடியாத
களங்கத்தை ஏற்றுக் கொண்டன.

ஓர்
இரங்கற்பா

கனடா நாட்டின்
கண்ணீர்க் காப்பியமே!
உன் வரிகளை
உலக மக்களின்
இதயத்திலன்றோ
எழுதி விட்டுச்
சென்று விட்டாய்!

வரலாற்றுப் புகழ்பெற்ற
கிரேக்க
மராத்தான் ஓட்டம்
உன் முன்னால்
தத்துக் கிளிப் பாய்ச்சல்
ஆகி விட்டது,

துப்பும் எச்சிலும்
தூர விலகிச் செல்லும்
தொழு நோயர்க்குத்
தொண்டு செய்து,
தானும்
தொழு நோயனாக மாறிய
டேமியன் பாதிரியின் தொண்டு
உனது தொண்டின் முன்னால்
கேலிச் சித்திர மாகிவிட்டது.

எங்கள் நாட்டில்
தீர்த்தமிழுக்காகச் சிலபேர்
தீக்குளிப்ப துண்டு.
அத் தீக்குளிப்புக்கூட
உன் தியாக
வேள்வியின் முன்னால்
திரௌபதி அம்மன் கோவில்
தீமிதி விழா ஆகிவிட்டது.

நீ பழுத்த இலையா
உதிர்வதற்கு?
பார்வை
வழுக்கி விழும்
பட்டுத்தளிர்.

லாரன்ஸ் நதிக்கரையின்
குளிர்மரக் காட்டில்—
முத்தமிட்ட இடமெல்லாம்
அருப்பு வைக்க,
காதல் முணு முணுப்போடு
ஆப்பிள் மரத்தைக்
கட்டித் தழுவும்
மென் காற்றுக்குப் போட்டியாய்—

சந்தனக் கட்டை
கல்லில் தேய்வது போல்
தங்கச் சரிகைக் கூந்தல்
சாயல் மயில் ஒருத்தி
உன் இடுப்பில் தேய

நடந்தும் மிதந்தும்
நளினமொழி பேசியும்
உணர்ச்சியில் கரைந்து
உலகத்தை மறந்தும்
அன்றிலாய்
வானம்பாடியாய்,
புணர்ச்சி இலக்கியத்தில்
மட்டுமே தோன்றும்

ஃபோனிக்ஸ் பறவையாய்த்
திரிய வேண்டிய வயதில்—

உன் காலொன்று
வெட்டப் பட்டுக்
கண்ணீர் ஒடையானாய்!

ஆனால்,
எங்கள் நாட்டுத்
திருக்குறள் போல்
ஒன்றரை அடியிலேயே
உலகப்புகழை
ஒடி வளைத்துக் கொண்டாய்!

உனக்கு வந்த
புற்று நோய்...
நோயா அது!
சதையுடம்பின் சகாரா!
மேனி மண்ணின்
மேல்விழுந்த ஹிரோஷிமா!

தசைக் கறையான்!
உயிரைச் சுரண்டியுண்ணும்
குருத்து வண்டு!

வளரும் வயிற்று
வாதாபி அரக்கன்!

உள்ளே கருவுற்று
உள்ளே வளர்ந்து
பின்னர்
வளர்த்த முட்டையை
உடைக்கும்
சாவுக் குஞ்சு!

விங்கன்
காந்தி

கென்னடி
ஆகியோரின் சாவு
விபத்துக்கள்!
உன் சாவு
வீர மரணம்!

நீ
கண்ணீரையே
அமுதமாகக்
கடைந்து தந்த
மந்திர மலை!

துருவங்களைத்
தொட்டுக் கொண்டிருக்கும்
அமெரிக்கக் கண்டத்தின்
ஒரு கோடியிலிருந்து
மறு கோடிக்கு
நீ ஒற்றைக்காலில்
ஓடிக் கொண்டிருந்தபோது—

உன் உடம்பு
சிந்திய குருதி,
சேசு
சிலுவையில் சிந்திய
குருதியைவிடப்
புனிதமானது.

நீ
ஓடிக் களைத்து
உயிர்த்த பெருமூச்சு
கார்க்கியின் 'அன்னை'
கடைசியில் வெளிப்படுத்திய
பெரு மூச்சைவிட
ஆழமானது.

நடை ஓய்ந்த
நேரத்தில்

நீ நிறுத்திய
கடைவிழிக்
கண்ணீர்த் தேக்கம்—

கணவன்
கற்பு
சைக்குழந்தை
யாவும்
பலாத்காரமாகப்
பறிக்கப்பட்ட
அரிஜனப் பெண்ணின்
கண்ணீரை விட
இரக்கத்திற் குரியது.

வட்ட மிட்ட
எங்கள்
சிறிய விழித்திரையில்
வாமன னாக
வளர்ந்து நிலைத்தவனே!

சாகும் போது
சாவிக் கொத்தைத்
தடவிப் பார்க்கும்
உலகத்தில்—
நீ எங்கள்
இதயத்தின் ஆழத்தைத்
தொட்டுத்
தடவிச் சென்றாய்!

பிரியும் போது
கண்களையும்
கன்னங்களையும்
முத்தமிடுவர்!
நீ—
உலகின்
புண்களை யன்றோ
முத்தமிட்டாய்!

சாவு—
சாதாரணனுக்கு
ஒப்பாரி.
உனக்கு
ஒப்பற்ற மாகாவியம்.

புற்று நோய்ப்
போராட்ட நிதியாக
நீயோர்
துறு கல்லைக் கேட்டாய்!
ஆனால்—
உலகம்
இமயத்தையே
உன் முன்னால்
எடுத்துப் போட்டது.

இருபதாம் நூற்றாண்டில்
குறிப்பிடத்தக்க நிகழ்ச்சி
உலகப்போர் என்று
வரலாற்று வல்லுநர் கூறுவர்.
நான் சொல்லுகிறேன்—
'நீதான்' என்று,

○

சென்னையின் முகங்கள்

○

சென்ட்ரல்

*மாயையின் கருப்பை.
புகைநாகப் புற்று.
போர்ட்டர்களின்
செங்கோட்டை.
தரைத் துறைமுகம்.
இரும்பு நரம்புமுடிச்சு.
விபத்துக்களின்
மொத்த விற்பனை நிலையம்.
குறிஞ்சியும் பாலையும்
திணைமயங்கும் நெய்தல்.

தலைமை மருத்துவமனை

நோய்க் குடும்பத்தின்
அடுக்குமாடிக் கட்டிடம்.
வருத்தங்களின்
திருத்த மேடை.

---

*மாயை — சூரபன்மன் தாய்

சென்னையின் வீக்கம்.
இதன்—
இருண்ட இம்முகத்தில்
பளிச்சிடும் புன்னகையே
பாவாடைச் செவிலியர்.
இங்கு—
சாவுக்கும்
கட்டணம் வசூலிக்கப்படுகிறது.
மனித எலிகள் இங்கு
மருத்துவ சோதனைக்குப்
பயன்படுத்தப் படுகின்றன.

பாரி முனை

பாய்ந்து வரும்
பல்லவனின் தங்கல்மனை.
வழக்கு மன்றக் கருப்பு வெளவால்கள்
வட்டமிடும் பழத்தோட்டம்.
சென்னைக் கடிகாரத்தின் சாவி
இங்குதான் முடுக்கப்படுகிறது.
இங்கு படுத்திருக்கும்
நடைபாதைக் கடையில்
தாயைத் தவிர
எல்லாவற்றுக்கும் போலி உண்டு.
இங்கு—
காலையிலும் மாலையிலும்
கண்களாலேயே பெண்கள்
கற்பழிக்கப் படுகின்றனர்.
ஆகையால் தான்
உயர்நீதி மன்றமே
இவ்விடத்தில் கட்டப்பட்டது.

மெரீனா

இந்தப் பூ
மாலையில் மலர்ந்து

அர்த்த ராத்திரியில்
உதிர்ந்து விடுகிறது.

இங்கு—
வலைகள்
விரிக்கப் படுகின்றன.
இறுக்கம்
தளர்த்தப் படுகிறது.

இந்த அந்தி நேரத்தில்
பாம்பின்
தூண்டுதல் இன்றியே
பழங்கள் பறிக்கப்படுகின்றன.
தளிர்கள் தள்ளாடுகின்றன.
பழுப்புகளின்
பச்சை ஏக்கங்கள்
சுண்டல் இசையில்
தாலாட்டப் படுகின்றன.

திருமணங்கள்
சொர்க்கத்தில் அல்ல;
இங்குதான்
நிச்சயிக்கப் படுகின்றன.

கோட்டை

காகித மனிதர்கள்
நடமாடும்
தமிழகத்தின்
கருங்கல் இதயம்.

இங்கு—
கொடிகள் படர்வதில்லை.
ஏற்றி
இறக்கப் படுகின்றன.

கோட்டையில்
சண்டையைத் தவிர
வேறு என்ன நடக்கும்?

ஒரு மலரின் புலம்பல்

மனிதனே!
உன் பாபக் கரங்களால்
என்னைத் தீண்டாதே!
என்னைச்
செடியிலேயே சாகவிடு.

நான்—
உனக்காகவா மலர்கிறேன்?
இல்லை.
என் நெஞ்சில்
ஆயிரம்
இன்பக் கனவுகளை எழுப்பி,
களிமயக்க இன்னிசையால்
காதற் கட்டியம்
உரைத்த வண்ணம்
என்னை நோக்கிப் பறந்துவரும்
வைர மணிக்கண்
வண்டுக்காகவன்றோ மலர்கிறேன்.

நான் விரித்திருக்கும்
மகரந்தப் படுக்கைகூட
அவனுக்குத்தான்.
எட்டி நில்!
என் காதலன்
என்னுள்...
தன்னை விதைக்க வருகிறான்.

மனிதனே!
என்னைத் தொடுவதற்கே
உனக்கு உரிமையில்லாதபோது
என்னைப் பறிக்கவும்
என்னை முகரவும்
இறுதியில்—
என்னைக் கசக்கி எறியவும்
உனக்கென்ன உரிமையிருக்கிறது?
இக் கற்பழிப்புக்குத்
தண்டனையே கிடையாதா?

உன் பாபக் கரங்களால்
என்னைத் தீண்டாதே!
என்னைச்
செடியிலேயே சாகவிடு!

○

சாளரத்தின்
சாபக் கேடுகள்

○

அவற்றைக் கிழித்தெறியுங்கள்!
பலகணியை மறைத்துத் தொங்கும்
அப்பட்டுத் திரைச்சேலைகளைச்
சீக்கிரம் கிழித்தெறியுங்கள்!

அத் திரைச் சேலைகளில்
தீட்டப்பட்டிருப்பது
புகழ் பெற்ற ஓவியனின்
கைவண்ணமாக இருக்கலாம்!

அவற்றின் ஓரத்தில்
ஊஞ்சலாடும் குஞ்சலங்கள்
தங்கச் சரிகையால்
கத்தரிக்கப் பட்டு
முத்துக்களால் கூட
அலங்கரிக்கப் பட்டிருக்கலாம்!
என்றாலும்—
அவற்றைக் கிழித்தெறியுங்கள்!

மங்கும் விளக்கொளியில்
மதுமயக்க மெல்லிசையில்
கனவான்கள் நடத்தும்
கற்பழிப்புகளுக்கும்

கருப்புக் குற்றங்களுக்கும்
பாதுகாப்பாகத் தொங்கும்
அந்தச்—
சாளரங்களின் சாபக்கேடுகளைக்
கிழித் தெறியுங்கள்.

வேண்டுமென்றே
விலக்கப்பட்ட
சூரிய ஒளியும்,
வெப்பத்தைத் தணிக்கும்
மெல்லிய பூங்காற்றும்
தடையின்றிச்
சுதந்திரமாக உள்ளேவரட்டும்.

புல்லாங் குழல்

நாட்டிய மலர்கள்
நகைத்துச் சிரிக்கும்
குன்றின் சரிவில்.
கண்ணாடி அருவியின்
கரை யோரத்தில்
பசுமையாக நான்
பருவமடைந்திருந்த நேரத்தில்
ஒரு குறும்புக்காரன்
என்னை
வெட்டி எடுத்துவந்தான்.

உணர்ச்சி நெருப்பில்
பழுத்த கம்பிகளால்
என்னைத் துளையிட்டான்.

பின்னர்—
தூரத்தும் நினைவுகளோடு
என்னைத்
தூர எறிந்துவிட்டுத்
திரும்பிப் பாராமலே
சென்று விட்டான்.

ஏழாயிரம்
இன்னிசைக் கனவுகளை
நிரப்பிக் கொண்டிருந்தாலும்
என் இதயத்திலிருந்து
இன்று
ஏக்கப் பெருமூச்சுக்களே
வருகின்றன.

கறையான் அரிப்பதற்கு முன்
என்னை எடுத்து மீட்டவல்ல
இசைக் கலைஞன் யார்?

ஒலி பெருக்கி

குழந்தைப் பருவத்தில்
உன்னை நான்
வியப்போடு பார்த்ததுண்டு.
காரணம்—
நீ பேசுவதும் பாடுவதும்
உன்சொந்தக் குரலென்று
நினைத்தேன்.

உனக்குப் பின்னால்
வேறொருவர் பேசுகிறார்
என்பதை அறிந்ததும்
உன்மீதிருந்த மரியாதையே
எனக்கு
அடியோடு போய்விட்டது.
...ப்பூ நீயொரு தகரடப்பா!

உன் இசைப்பாட்டைக்
கேட்கும்
சில அழுத வேளைகளில்
உணர்வெல்லாம் ஒன்றி
என்னை மறந்து
நான் நிற்பதுண்டு.

ஆனால் நீ—
உன் வாயிலிருந்து
உன்னுடையதாக

ஒலிபரப்பும் பாடல்வரிகள்
சில மேதைகளின்
பதிவு செய்த
இதயத் துடிப்புகள்.

முந்தாநாள்—
நீ நாத்திகப் பேச்சுக்களை
ஒலிபெருக்கினாய்.

நேற்று—
ஆத்திகப் பேச்சுக்களை
ஒலிபெருக்கினாய்!

இன்று—
அரசியல் பேச்சுக்களை
ஒலிபெருக்கிக்
கொண்டிருக்கிறாய்!

நாளை—
இசைத் தட்டு நடனத்துக்கு
அச்சாரம் வாங்கியிருக்கிறாய்!
உனக்குக்
கொள்கையே கிடையாதா?

ஹும்...
உன்னைக் கடிந்துகொண்டு
என்ன பயன?
உன் தொழிலே
வாடகைக்குப் போவதுதானே?

பனித் துளி

இரவில் ஓடிக்களைத்த
நிலவுக்குதிரையின்
கடைவாயில் வழியும்
நுரைச் சிதறல்.

வாங்கும் இலைக்கரத்தில்
தேங்கும் குளிர்ச்சியின்
திரவ வடிவம்.

புல்நுனி மேடையேறி
மங்கிய செங்கதிர் விளக்கில்
ஆடையின்றி நடிக்கும்
கேபரே நடனக்காரி

○

நில நடுக்கம்

○

நிஜாமியின்
பாலைப் பயித்தியத்தைச்
சிலர் தங்கள்
குறிஞ்சிக் கொல்லையில்நட்டு
அதன் அருகே
ஒயாசிஸ் என்று எழுதித்
தொங்கவிட்டுக் கொண்டிருந்தனர்.

ஷாஜகான் என்ற
கூட்டுப்புழு
காதல் எச்சிலால்
கட்டிய
பட்டுக் கூட்டைப்
பார்த்துப் பார்த்துச்
சில சிலந்திகள்
வலை பின்னிக்கொண்டிருந்தன.

சில ஆதிசங்கரர்கள்
பழைய கோபுரங்களைப்
புதுப்பித்துக்
குடமுழுக்காட்டிக் கொண்டிருந்தனர்.

சில பராந்தகர்கள்
சிவச் சிதம்பரத்துக்கு
மீண்டும் மீண்டும்
பொன்வேய்ந்து கொண்டிருந்தனர்.

ஆனந்த பவனத்துக்குச்
சுண்ணாம்பு அடிக்க
அமர்த்தப்பட்ட
கூலிக்காரர்கள் தங்களை
அஜந்தா ஓவியர்களென்று
விளம்பரப் படுத்திக்கொண்டிருந்தனர்.

அப்போது
நிலம் நடுங்கிற்று.
பூமிச் சல்லடை
எல்லாவற்றையும் போட்டுச்
சலிக்கத் தொடங்கியது.

மண் வெளியில்
மின்னல் வெடிப்புகள்!
பூமிக்குத்
தன்னைத்தானே விழுங்கும்
பேய்ப் பசி.

தீ நாக்குகள்
ஒயாசிஸ்களை
மென்று
விழுங்கிக் கொண்டிருந்தன.

கோபுரங்களும்
செங்கோட்டைகளும்
குப்புறக் குனிந்துகொண்டிருந்தன.

மந்திரக்காரன்
குப்பிக்குள் அடங்கும்
வேதாளம் போல்
இயற்கையின் சீற்றம்
கொஞ்சம் கொஞ்சமாகக்
குறையத் தொடங்கியது.

ஆழத்தில்
அமுக்கப்பட்ட
சுரைக் குடுவை
நீர்மட்டத்துக்கு மேல்
எம்பிக் குதிப்பதைப்போல்
எட்டைய புரத்தில்
ஒரு புதிய மலை
எழுந்து நின்றது.

அந்நிமிர்ந்த
மலையின் அடிவாரத்தில்
நாள் தோறும்
புதிய மாமல்லபுரங்கள்
தோன்றிய வண்ணம்
இருக்கின்றன.

இலக்கியப் பேரங்காடி

காப்பு அவையடக்கம்
கடவுள்வாழ்த் தென்றுசொல்லிப்
பூப்படையாச் செய்யுள்
புனைந்த புலவரிடைக்
கருப்பை வரிகளால்
கற்பனைகள் நடத்தியவன்.

சதையைக் கவிதைச்
சாற்றால் நனைக்காமல்
விதையைத்தன் கற்பனை
வீரியத்தால் நனைத்தவன்.

புரட்சியென்று மின்மினிப்
பூச்சிகளைத் தந்தவர்க்கு
நெருப்புத் துண்டுகளை
நேரில் வழங்கியவன்.

மலையிருக்கும் இடம்நோக்கி
நடக்காமல் தலைநிமிர்ந்த
மலைகளையே தன்பக்கம்
வர வழைத்த தமிழ்ச் சுல்தான்.

போதைக்கு மதுவருந்தும்
புலவருண்டு; பாவேந்தன்
மதுவுக்கே போதை
வழங்கும் கவிதைமது.

வீணையை விரல்தானே
மீட்டும்? பாவேந்தன்
வீணையே விரலாகி
மீட்டிய தமிழ்வீணை.

அலிகள் அலங்கரித்த
சுயம்வரத்தில், தமிழ்க்குமரி
ஆராய்ந்து தேர்ந்தெடுத்த
ஆண்மையுள்ள இளவரசன்.

தொட்டில்களைப் பிறைநிலவாய்த்
தொங்கவிட்டுக் காட்டியவன்;
கட்டில் அசைவில்
கானல்வரி மீட்டியவன்;
கல்லறை களையெல்லாம்
தாஜ்மகால் ஆக்கியவன்.

சிறுநீரைப் போலச்
சிந்திய கவிஞரிடைப்
பெருநதியாய்த் தமிழ்வயலில்
பெருக்கெடுத்து ஓடியவன்.
உதிரும் மலர்களை
நாரால் பிணிக்காமல்
மின்னல் கயிற்றால்
விண்மீனைக் கட்டியவன்.

காகிதத்தில் சீர்திருத்தக்
கருத்தை எழுதாமல்
சூட்டுக்கோலால் தமிழர்
நெற்றியிலே எழுதியவன்.

சிலகட்சித் தேவதைகளுக்கு
இவன் பாடல்கள்
திருப்பள்ளி எழுச்சிகள்!

சில கட்சிக்காரர்களுக்கோ
இவன் பாடல்கள்
கொட்டை எழுத்தில் எழுதப்பட்ட
கல்லறை வரிகள்!

கம்பன் நிலவை—
முகம்பார்க்கும்
கண்ணாடி யாக்கினான்
ஆனால்—
நிலவையிவன்
மூக்குக் கண்ணாடியாக்கினான்.

இவன் ஓர்—
இலக்கியப் பேரங்காடி!
இவனிடத்தில்
சரக்கு வாங்கச்
சென்ற யாரும்
வெறுங்கையோடு
மீண்டதில்லை.

அங்கு செல் குதிரையே!

குதிப்பதால் பெயர்பெற்ற குதிரையே! வீரரின்
மதிப்பு வாகனமே! மாவே! தாவும்
சந்த விருத்தமே! சிந்துப் பாடலே!
உந்தும் வேகத்தின் உருவக அணியே!

நடைப்பெரு மிதமே! நடுக்கும் பெரும்போர்ப்
படைப்பெரு வானில் பாய்கின்ற மின்னலே!
கனைக்கும் கம்பீரமே! கட்டுக் கடங்காமல்
எனக்குச் சவாலாய் எதிர்நிற்கும் ஆற்றலே!

கானல் நீர்போல் சிலிர்க்குமுன் உடம்பில்
சேணம் பூட்டிச் சீறும் சாட்டையைச்
சுழற்றி அடித்துன் துடுக்கை அடக்கிக்
காடும் மேடும் கல்லும் முள்ளும்
நாடும் நகரமும் நடுங்களன் முன்னோர்
உன்னை நடத்தினர்;

ஆனால் நானோ—
உன்றன் முதுகு நெளிய ஊர்ந்து
குன்றைத் தாவிக் குவலயம் கடந்து
வானவில் வீதியில் வட்ட மிட்டு,
அந்திவான் சோலையில் அரும்பி, விடியலில்
சிந்தும் பூக்களைச் சேகரம் செய்து,
வெள்ளி நிலவுக் கூடையில் இங்கே
அள்ளிக் கொணருவேன்! அங்குசெல் குதிரையே!

வானவில் துண்டே!
வண்ணத்துப் பூச்சியே!

வண்ணத்துப் பூச்சியே! வண்ணத்துப் பூச்சியே!
கண்பசி தீர்க்கும் கலைச்சுவை விருந்தே!
உடைந்த வானவில் துண்டுகள் விண்ணைக்
கடந்து வந்து காட்சிதரும் அழகே!
மிதக்கும் இன்பமே! மின்னும் நவமணிப்
பதக்கமே! பறக்கும் பவளத் துண்டே!
கோல மலர்மீது குவிந்து விரியும்
நாளிதழ்ப் பூவே! நாட்டிய மாடித்
தென்றல் காற்றில் திரிகின்ற பட்டமே!

தந்தைதாய் மடியில் மாறி மாறிக்
குந்திக் குதித்து விளையாடும் குழந்தைபோல்
முல்லையில் தவழ்ந்துசெவ் வல்லியில் புரள்கிறாய்!
கொம்புத் தேன்மலர்க் குளத்தை, நீண்டவுன்
தும்பிக் கையால் துழாவு கின்றாய்!

கொடியின் விரல்நுனிக் கொம்பில் அமர்ந்து
போதி மரத்துப் புத்தனைப் போல
ஏதோ நினைப்பில் இருக்கிறாய்! உடனே
பனியில் குளித்த பருவ மேனிக்
குமரி மலரிடம் கொஞ்சி விளையாடி
இமைக்காத நீல மரகத விழிகளால்
சுமைக்காதல் பேசிச் சுவைத்து மகிழ்கிறாய்!
மரகதச் சோலையின் மாப்பிள்ளை யாகிய
உன்றன் வாழ்க்கை உயர்ந்தவோர் காப்பியம்.

ஆனால்—
பெருமை பேசும் இந்தியர் வாழ்க்கை
உருவம் சிதைந்த உடைந்த கண்ணாடி.

சிந்திக் கிடக்குமிச் சிதறலில் முழுமையாய்
இந்தியன் எவனையும் காணோம்; இங்கே
இந்து முஸ்லீம் கிறித்தவன் பௌத்தன்
சந்தியா வந்தனச் சைவன் வைணவன்
பார்ப்பான் பறையன்நாடான் நாய்க்கன்
என்ற கூச்சலே எதிரொலிக் கின்றது.

மதச்சார் பற்ற அரசாங் கங்கள்
மதத்தை மறைவாய்த் தாலாட்டு கின்றன.
மதப்புதர் மண்டி மனிதப் பண்பெனும்
மலர்க்காடு இன்று மண்ணில் புதைந்தது.
நிற்பவன் தனது நிழலையே எதிரியாய்க்
கற்பனை செய்யும் காலம் வந்தது.
உள்ளொளி பெருக்கிய மதங்கள், இன்று
கள்ள வாணிபப் பொருளாகி விட்டன.

பூணூல் சுருக்குக் கயிறாய், வளைந்த
கூனல் பிறையே குற்று வாளாய்ச்
சிலுவையே ஈட்டியாய் மாறி விட்டன.

பாதி உலகில் தனதுகால் நீட்டிப்
படுத்துக் கிடக்கும் பரந்த ருசியாவில்
யூதம் கிறித்தவம் இசுலாம் என்ற
மதங்கள் பற்பல இருப்பினும், அங்கே
மனிதன் ஒருவனே; அவன்தான் ருசியன்!
விரல் நுனிக்கு மேலங்கு நகத்தையும்
வீட்டு வாயிலுக்கு மேலங்கு மதத்தையும்
வளர்க்கும் வழக்கம் ருசியருக் கில்லை.

அதைப்போல் இந்திய மண்ணும் ஒருநாள்
மதப்போர் இல்லாத சோலையாய் மாறுமா?
பண்புக் கொடிகள் படர்ந்துகொத் தாக
அன்பு மலர்கள் அங்கே மலருமா?
சமத்துவத் தென்றல் வீசுமா? உனைப்போல்
உணர்ச்சிச் சிறகடித்து உயரப் பறந்து
மலர்தொறும் மலர்தொறும் மகிழ்ந்துவீற் றிருக்கும்
நிலையிங்கு நிச்சயம் தோன்றுமா?
வண்ணத்துப் பூச்சியே! வாய்திறந்து கூறு!

○

அரே ராம!
அரே கிருஷ்ண!

○

காட்சி 1

இடம்: நைமி சாரண்யத்தில்
இராமனின் அசுவமேத வேள்விச்சாலை.

நேரம்: காலை

உறுப்பினர்: சீதை, இராமன், வசிஷ்டர், வால்மீகி, புலஸ்தியர், கௌதமர், நாரதர், தேவர், கூத்திரியர், வாம தேவர், இராமனது பரிவாரம்.

தேவர்கள்

அமராபதிச் சோலையில்
பரந்தாமனின்
விழிகளுக்குப் போட்டியாக
மலரும்
பாரிஜாத மலர்களுக்கு
இல்லாத மணம்
இங்கு எப்படி வந்தது?

கற்பக மலர்களின்
பட்டுத் தளிர்மேனியைத்
தொட்டுத் தடவும்
மென் காற்றுக்கூட,
இங்கே—
பொய்கையில் குளித்தெழுந்து
புதுமலர்ப்பந்தலில் புரண்டு
மணப்பல்லக்காக
மிதந்து வரும்
மந்த மாருதத்துக்கு
ஒப்பாகாது.

கிருத யுகத்தில் மட்டுமே
வீசக்கூடிய
இன்பத் தென்றலன்றோ இது?

இங்கு—
ஏதோ ஓர்
அற்புதம் நிகழ விருக்கிறது.
இன்று—
பூமியே
புல்லரிப்போடு
காட்சியளிக்கிறதே!

வசிஷ்டர்

ஆமாம்!
களங்கமில்லாத
பளிங்கு நிலவொன்று
இந்த விடியலில்
உதயமாகப் போகிறது.
நெருப்புச் சூரியனும்
விழித்தெழுந்து
நேரில் தோன்றிவிட்டான்.
என்ன நடக்கப் போகிறதோ?

விசுவாமித்திரர்

உஷ்...
போதும் உமது
புதிர்ப் பேச்சு!
அதோ சீதை!
இரண்டு
குழந்தைகளைப் பெற்ற
தாயா இவள்!
இல்லை!
பொன்னில் குளித்த
இளங்காலைப் பொழுது!

அன்று—
மிதிலை மேன்மாடியில்
ராகவன் மீது வீசிய
அதே வலைக் கண்கள்!
உணர்ச்சி
வேறுபாடுகளுக் கேற்ப
விட்டுவிட்டுத் துடிக்கும்
அரக்காம்பல் செவ்விதழ்கள்-
பெண்மை அரசு
இவள் மேனியில்
ராஜசூயம் நடத்துகிறது!

கௌதமர்

மழையில் குளித்தெழுந்த
மலைச் சாரல் போலக்
காவி யுடையில்
பளிச் சென்று
காட்சி யளிக்கிறாள்.
இவள் அணிந்த பிறகு
காவியுடைக்கே பெரிய
கௌரவம் வந்துவிட்டது.
மழை வில்லை
வானம்தான்
அணிய வேண்டும்!

நாரதர்

இவள்—
அடியெடுத்து
வைக்கும் போதெல்லாம்
என்தம்புராவின் நரம்பு
அதிர்ந்து அழுகிறது.

வாமதேவர்

வால்மீகியின்
கிரௌஞ்ச வத வரிகள்...

இல்லை...
அசோக வனத்தின்
அழகிய கற்பனை
அவரைப்
பின்தொடர்ந்து வருகிறது.

புலஸ்தியர்

உஷ்...
வால்மீகி பேசுகிறார்.

வால்மீகி

தாசரதி!
நான்—
மழைக்கடவுள்
வருணனின்
குலக் கொழுந்து.
வானத்திலிருந்து விழும்
மழைத்துளிபோல்
நான் களங்கமற்றவன்.
என் பேச்சு
வேள்வி நெருப்பைப்போல்
தூயது; ஆற்றல் மிக்கது.

இச் சீதையின் உள்ளம்
மார்கழிப் பனித்துளி.
இவள் உள்ளத்தில்
பொய்க்கு இடமில்லை.
இவள் இதயவீணை
இராம நாமத்தைத் தவிர
வேறு ராகங்களை
மீட்டியதில்லை.
இராகவானந்தமே
இவள் சிந்தனை:

லவனும் குசனும்
அவல வாழ்க்கையில்
இவள் வடித்த
இரண்டு துளி
ஆனந்தக் கண்ணீர்!
இவள் கூம்பிய
முகத்தில்
அதிசயமாகத் தோன்றிய
இரண்டு
புன்னகைக் கீற்றுகள்.

தூய கங்கைநீரைக்
கமண்டலத்தில்
ஏந்திக் கொண்டு
பூசை அறையில்
நுழைவது போல்
தூய்மையின்
பிறப் பிடமான இவளை
என் தவக் குடிலுக்கு
இட்டுச் சென்றேன்.

கதிரவன் ஒளியில்
தூசி பறப்பதுண்டு.
ஆனால்—
ஒளியோடு கலப்பதில்லை.

இவளைச்
சுற்றிப் பறக்கும்
அவச் சொற்களுக்கும்
இவளுக்கும்
தொடர்பில்லை.

நீ உயிர்க்கும்
இந்த மூச்சுக் காற்றைச்
சுவாசிக்க மறுக்காதே!

உலகம் என்பது
உடைந்த கண்ணாடி.
அவற்றின்
பிரதி பலிப்புகள்
ஒரே மாதிரியாக
இருப் பதில்லை.

உனக்கு
உன் மனச்சாட்சியே
சிறந்த அளவுகோல்.
அந்த அளவுகோலால்
சீதையின் கற்பை
அளந்து கொள்.

சீதை
குற்றமற்றவள்.
லவகுசர்களின்
உடலில் ஓடும் குருதி
இச்சுவாகு குலத்தின்
ஈடற்ற குருதி.
என் வாக்குச்
சத்திய வாக்கு!

என்கூற்றுப் பொய்யானால்
என் தவத்தின் பலன்
உம்...
அது கிடக்கட்டும்!
என் பிறவிப் பயனாக
நான் எண்ணி எண்ணிப்
பூரிப்படையும்
என் கவிதையாற்றல்
என்னைப் புறக்கணித்துவிட்டுப்
போகட்டும்!

இராமன்

சந்தனக் காட்டுக்குள்
புகுந்து வரும் காற்று
மணத்தென்றல்
ஆகிறது.
சாக்கடையைக்
கடந்து வரும் காற்று
அருவருப்புக்கு
ஆளாகிறது.

தூய்மை கெடுவதற்குக்
காற்று
காரணமில்லையென்றாலும்
நாம் அதை
வெறுக்கத்தான் செய்கிறோம்.

என் வாழ்வின்
வசந்தத் தென்றல்
சீதைதான் என்பதை
நான்—
ஒப்புக் கொள்கிறேன்.

ஆனால்—
அவளையும் அறியாமல்
அவள் மீது படிந்த
அவதூற்றுப் புழுதியை உதறித்
தான் குற்றமற்றவள்
என்பதை அவள்
மெய்ப்பித்தாக வேண்டும்.

சீதை (தனக்குள்)

ஊமத்தைக்
காயைப் போல்
இவர் சொற்கள்

முள்ளாகவே
வெளி வருகின்றன.
ஏ! பூமித்தாயே!
நீ விரிந்து என்னை
விரைவில் விழுங்கிவிடு!

வால்மீகி

முத்தின் தரத்தை
உரைத்துப் பார்த்தா
உணர வேண்டும்?
இம்மிதிலை முத்தின்
முகம் சிந்தும்
கதிரொளியே
போதாதா?

இராமன்

மூர்சடக்கிச்
சுரங்கத்தில் இறங்கி
உயிரையே
பணயம் வைத்துத்
தோண்டி
எடுத்துவந்த தங்கமும்
நெருப்பில
வெந்த பிறகுதான்
மக்களால்
ஏற்றுக் கொள்ளப் படுகிறது.

கைலாயத்தையே
பெயர்த் தெடுத்த
கரங்களை வெட்டி,
திக்கு யானைகள்
பொருத மார்பைச்
சல்லடைக்
கண்களாக்கி

இலங்கையிலிருந்து
வெற்றிச் சின்னமாக
நான்—
மீட்டு வந்த சீதையைத்
தீக்குளிப்புக்குப்
பின்தானே
உலகம் ஏற்றுக்கொண்டது?

கொடியிலிருந்து
பறித்தெடுத்த
வெற்றிலைத்
தளிரைக் கூடக்
கழுவித்தான்
வாயில் போடுகிறோம்.
இவள்...

சீதை (தனக்குள்)

என் ஒவ்வொரு
மயிர்க்காலிலும்
ஊசிகள் பாய்கின்றன.
நத்தையைப் போல்
எனக்குக்
காதுகளே இல்லாமல்
இருந்திருக்கக் கூடாதா?

இராவணன்
ஒரு வகையில் நல்லவன்.
அவன் என்னை
மறைவான இடத்தில்தான்
சிறைவைத்தான்
இவர் சொற்கள்—
பலர் முன்னிலையில்
என்னை

வெளிப்படையாக
நிர்வாணப் படுத்துகின்றன.

இராமன்

இவள்...
குற்றத்தின்
சுவடு பதியாத
வெற்றிலைத் தளிராகவே
இருக்கட்டும்!
குசலவர்கள்
என் குலக் கொழுந்துகளாகவே
இருக்கட்டும்!
இவ்வுண்மைகளை
முதலில்—
உலகம்
ஏற்றுக் கொள்ளட்டும்.
அதன் பிறகு...

வால்மீகி

உலகம்!
உலகம்!
உலகம்!
சீதை! வாம்மா!

சீதை (தனக்குள்)

பிள்ளைப் பேற்றின்
போது கூட
நான் இவ்வளவு
வேதனைப் பட்டதில்லை.
சொற்கள்
வெளியில் வர
மறுக்கின்றனவே!

(வெளிப்படையாக)
இந்த மல்லிகைக் கொடி
தனக்குப் போட்ட
பந்தலை மீறி
வெளியில் படர
எப்போதும்
விரும்பிய தில்லை.

இந்தப் புனித கங்கை
ஆயிரம் ஆயிரம்
ஆண்டுகளாக
ஓடிப் பழக்கப்பட்ட
கற்புப் படுகையைவிட்டுக்
கரையுடைத்துச்
செல்ல விரும்பியதில்லை.

இமைகளைத் தவிர
வேறுயாரும் என்
ஈர விழிகளைத்
தீண்டியதில்லை,
இராமனைத் தவிர
வேறுயாரும் என்
இதயத்தைத்
தீண்டியதில்லை.

மூச்சுக் குழல்
சோற்றுப் பருக்கையை
ஏற்றுக்கொள்வதில்லை.
என் உள்ளமும்
இராம நாமத்தைத்தவிர
வேறு எதையும்
ஏற்றுக் கொள்வதில்லை.

நான்—
வானத்திலிருந்து
நழுவி விழுந்த
மழைத் துளி.

என் பயணத்தின்
முடிவைப் பற்றி
நான் கவலைப் படவில்லை.
நான் விழும் இடம்
சிப்பியின் வாயா...
சிவந்த நெருப்புத் துண்டமா...
தெரியாது.

என் நினைவின்
தொடுவானம் சிந்தும்
கடைசி
நட்சத்திரங்கள் இவை.
என் உடம்பாலும்
உள்ளத்தாலும்
உதிர்க்கின்ற பேச்சாலும்
இராம பிரானையே
நான் பூசித்து வந்தது
உண்மையானால்,
மாதவன்
மாதேவியான
மண் மடந்தை
என்னைத் தன்னுள்
ஐக்கியமாக்கிக்
கொள்ளட்டும்.

(சீதை வேள்விச் சாலையைவிட்டுத்
தும்மலைப்போல் வெளியேறுகிறாள்)

காட்சி 2

இடம்: நைமி சாரண்யம்

உறுப்பினர்: இராமன், சீதை

இராமன்

சீதை! சீதை!
நில்! நில்லங்கே!
பறக்கும் புயற்கொடியே!
நளினமான உன்னடிகள்
அம்மி மிதித்த போதே
அழிஞ்சிக் கனிகள்போல்
இரத்தக் கோடிட்டுக்
கன்றிப் போயின.
அவற்றை அவசரப்படுத்திப்
புண்ணாக்கிக் கொள்ளாதே!

திரும்பிப் பார்!
நீ பஞ்சவடியில்
பாராட்டிப்
பாராட்டி
முத்தமிட்ட
செந்தாமரைக் கண்ணோடும்
செங்கனி வாயினோடும்
வல்வில் இராமன்
வந்திருக்கிறேன்.

சீதை

காவி உடைக்குள்
காதல் வெயிலுக்காக
ஏங்கி ஏங்கி
ஊசிப்போன
கனவுகள் அவை.

அந்தச் சீதை
வேள்விச் சாலையிலேயே
மரித்துப் போய்விட்டாள்.

இராமன்

மேன்மாடியில்
இருந்த உன்னையும்
மிதிலை
வீதியில் இருந்த
என்னையும்
அன்று பிணித்த
காதல் வலை...

சீதை

இன்று
சிலந்தி வலை
ஆகிவிட்டது.

இராமன்

அயோத்தி
அந்தப்புரத்தில்
நாம்—
அணு அணுவாகச்
சுவைத்த இன்பம்...

சீதை

அரங்கேற்றத்துக்குப்பின்
அர்த்தமில்லாமல் போகும்
நாடக ஒத்திகை
ஆகிவிட்டது

இராமன்

அசோக வனத்தில்
ஐயிரண்டு திங்கள்
அயலவன் பொறுப்பில்
இருந்த உன்னை
நெருப்பில் குளிப்பாட்டி
நெஞ்சத்தில்
ஏற்றுக் கொண்டேன்.

சீதை

அந்தப்
பத்துத் திங்களும்
மனைவியைப் பிரிந்து
தனிமையில்
திரிந்த நீர்—
எந்த நெருப்பில்
குளித்து வந்து
இந்தச் சீதையை
ஏற்றுக் கொண்டீர்?

இராமன்

கங்கைக்கு எதற்குப்
புனித நீராட்டு?
நெருப்புக்கு எதற்கு
அக்கினிப் பிரவேசம்?
அரசன்
ஆண்டவனுக்கு ஒப்பானவன்.
அவன் நின்மலன்.
அவனுக்கு
அரச நீதிதான் முக்கியம்.

அந்த நெருப்பில்
அவன்
யாரையும்
குளிப்பாட்டலாம்.

சீதை

மலர்—
நாரால் பிணிக்கப்பட்டு
மாலையாகி
மன்னன்
கழுத்தை மட்டுமே
அலங்கரிக்க வேண்டும்என்பது
சர்வாதிகார அரசியல்.
என்னைப் பொறுத்தவரை
மலர்—
மகரந்தம் சிந்தி
மணம்பரப்பிக்
காயாகிக்
கனியாக வேண்டும்.

இது—
மலரின் உரிமையாக
நான் கருதும்
மனிதாபிமானம்.

இராமன்

அப்படியென்றால்
நான் மனிதாபிமானம்
அற்றவன் என்று
கருதுகிறாயா?

சீதை

மனிதாபிமானம் உள்ளவன்
அரசியல் வாதியாக
இருக்க முடியாது.
சந்தர்ப்ப வாதமே
அரசியலின் ஆணிவேர்.

இராமன்

மூட்டிய தீயில்
உன்னைக் குளிப்பாட்டியதும்
காட்டுக் கனுப்பியதும்
சந்தர்ப்பவாதம் என்றா
கருதுகிறாய்?

சீதை

பாம்பும் மீனும்
பசியெடுத்தால்
தன் குஞ்சுகளையே
தின்றுவிடும்.
அரசியல் வாதிகளுக்குப்
பதவிப் பசியெடுத்தால்
மனைவி மக்களையும்
அவர்கள்—
இழக்கத்
தயங்க மாட்டார்கள்.

நீர்
விரும்புவது
பதவி!
விளம்பரம்!

இராச சூயம்,
அசுவமேதம்,
இவைகள்—
நீங்கள்
எட்டிப் பிடிக்கத்துடிக்கும்
பதவியின் படிக்கட்டுகள்.

நான்—
உங்கள்
அரசியல் விளம்பரத்துக்காக
வெட்டப்பட்ட
பலி ஆடு.

சம்பூகன் கொலை
ஒரு பச்சைச் சந்தர்ப்பவாதம்.
சம்பூகன்
சிந்திய இரத்தம்
மேல் வருணத்தாரின்
மேனியைக் குளிர்விக்கப்
பூசப்பட்ட
சந்தனக் காப்பு!

இராமன்

வைதேகி!
உன் வாயா
இப்படி
நெருப்புக் குழம்பைச்
சிந்துகிறது?
சாளரத்தில்
எட்டிப் பார்க்கும்
சந்திரன்
ஒளியைக் கண்டும்
வெட்கி நாணும்

ஜனக குமாரியா
இப்படிச்
சரமழை போல்
கொட்டுவது!

காதற்கரும்பே!
உன்னுடைய :
கல்யாண ராமனிடமா
இந்தக் கடுஞ் சொற்கள்?

உன்னுடைய
தாவு மலர்க்கைத்
தழுவலுக்கு
என் தடந்தோள்கள்
துடிப்பதைப்¡பார்!

உன்னைப்
பெருந்தன்மையோடு
மன்னித்து விட்டேன்.
விருந்தே! வா!

சீதை

அயோத்தி அரசே!
இந்தப்
பனிச் சொல்
பட்டாபிஷேகத்துக்கு
மயங்கிய காலம்
மலையேறி விட்டது.

நீங்கள்
வேண்டுமானால்
இரண்டு குழந்தைகளுக்குத்
தந்தையான பின்னும்
கல்யாண ராமனாக
இருக்கலாம்!

ஆனால் நான்—
கண்ணீரிலே கரைந்து
பெருமூச்சிலே மிதந்து
அவசரக்கார ஆடவர்களின்
சந்தேக நெருப்பிலே வெந்து
பதைத்துத் துடிக்கும்
பாரதப் பெண்குலத்தின்
தீனக்குரல்!

இராமன்

மன்னன்
என்னும் பேராறு
மக்கள் அணைக்கட்டின்
மதகு வழியே செல்லக்
கடமைப் பட்டது.
மக்களின் கருத்தை
மதித்து நடக்கும்
மாண்புமிகு பேரரசை
அமைப்பதே
என் குறிக்கோள்.
அதுவே—
இராம ராஜ்யம்.

சீதை

தத்துவார்த்தம்
அரசியல் வாதிகளுக்கும்
மதகுருக்களுக்கும்
அடிக்கடி வரும்
முறைக் காய்ச்சல்!

இந்த நாடு—
தத்துவம் பேசிப்பேசியே
சுடுகாடாகப் போகிறது.

இராமன்

சீதா!
மேக நாதனின்
நாகாஸ்திரத்தை விட
உன் சொற்கள்
கொடுமையானவை!

சீதை

இந்த மிதிலைக்கோடி
உங்கள்
மேனியில் மட்டுமே
படர்ந்தது உண்மையானால்,

என் இதயத்தில்
கொழுந்து விட்டெரியும்
கற்புக் கனல்
உங்கள் கையால்
ஏற்றி வைக்கப்பட்டது
உண்மையானால்,
வேதனை நெருப்பில்
கருகி உதிரும்
என் கண்ணீர்த்துளி
இந்தப் பார நாட்டைச்
சுடாமல் விடாது!

உமது
சொந்த நலனுக்காக
யாரோ—
பாதையில் சென்ற
பயித்தியக் காரன்
உம்மீது வீசிய
சாக்கடைச் சேற்றைக்
கழுவிக் கொள்வதற்காக,

இந்த நாட்டு
முட்டாள்களின்
விழித்திரையில்
உமது புகழோவியத்தை
விரிவுபடுத்திக் காட்டுவதற்காக,
இந்த நாட்டுப்
பெண்குலத்தையே
கேவலப்படுத்தி விட்டீர்.

இனி—
இந்த நாட்டில் தோன்றும்
ஒவ்வொரு அரசியல்வாதியும்
இந்த அரசியல் தந்திரத்தைப்
பின்பற்றாமல் இருக்கமாட்டான்.

இன்று
இந்தச் சீதை மட்டுமல்ல!
இனி இந்த நாட்டில்
ஒவ்வொரு வீட்டிலும்,
ஆடவரின்
அகங்கார நெருப்பில்
அநேக கோடி சீதைகள்
அக்கினிப் பிரவேசம்
செய்யத்தான் போகிறார்கள்.

தாழ்த்தப்பட்ட
சம்பூகர் கொலை
இனி—
இந்த நாட்டில்
தொடர் கதையாகி
இந்த நாட்டையே
அழிவுப் பாதைக்கு
அழைத்துச் செல்லாமல்
விடாது!

இந்தப் பாரத பூமியை
இராமராஜ்யமாக
நீர்—
மாற்ற விரும்புகிறீர்.
இலை—
இந்த நாட்டில்
பெயர் சூட்டு விழாவே
அரசியலாகப் போகிறது!
இது சத்தியம்! (ஓடுகிறாள்)

இராமன்

சீதா!
ஜானகி!
வைதேகி!
திரும்பிப்பார்!
உன்னுடைய தாசரதியைத்
தனிமை நெருப்பில்
தள்ளிவிட்டு ஓடாதே!

உன் மடியைவிடப்
பாதுகாப்பான இடம்,
நிம்மதியான இடம்,
இவ்வுலகில்
எனக்கு
வேறு எதுவும் இல்லை
என்பதை
உணர்ந்துதான் அழைக்கிறேன்.

நீ இல்லாத
அரண்மனை
எனக்குக் காளவாய்!
ஓடாதே! நில்!

பூமியின் மேனி
கிழிகிறது சீதா!
பூகம்பம்!
ஜானகி! பூகம்பம்!
உனக்காகவே
காலியாக இருக்கும்
என் இதயத்துக்குத்
திரும்பி வா!

சீதை

உமது இதயத்தைவிட
இப்பூமியின் அடிவயிறு
எனக்குப்
பாதுகாப்பான இடம்!

(உள்ளே பாய்கிறாள்)

காட்சி-3

இடம்: வைகுந்தம்

காலம்: கி.பி.1948 ஜனவரி

உறுப்பினர்:- திருமால், திருமகள், நாரதர்.

நாரதர்

நாராயண!
நாராயண!
ஆபத் பாந்தவா!
பக்த வத்சலா!
கருணா திதே!
இராமச் சந்திரப் பிரபோ!

அழுத தாரைபொழியும்
தங்கள்
திரு விழிப்பார்வைபட்டு
அடியேன்
தன்யனானேன்.

திருமால்

என்ன நாரதரே!
ஏது இந்தப்பக்கம்?
மின்னலைத் தொடர்ந்து
இடியோசை வரும்.
நாரதரைத் தொடர்ந்து
கலகம் வருமென்பர்.

நாரதர்

லக்ஷ்மி நாராயணா
தாங்கள் அறியாததா?

திருமால்

திருமகள் சங்கு
கோபித்துக் கொள்வாளோ
என்று அஞ்சி
என்னை
அவளுக்கு
அடங்கிய நாராயணன்
ஆக்கி விட்டீர்.

நாரதர்

பூ வுலகம் சென்றேன்.
புனித பாரதத்தையும்
பார்த்து வந்தேன்.

திருமால்

அப்படியா!
நான்
திரு அவதாரம் செய்த
திரு நாடாயிற்றே அது
நான் ஸ்தாபித்து வந்த
ராம ராஜ்யம்
எப்படியிருக்கிறது?

நாரதர்

நாராயண!
நாராயண!

திருமால்

என்ன நாரதா!
உன் சுருதி
வேறுபட்டு
ஒலிக்கிறது?

நாரதர்

பரந் தாமா!

திருமால்

அஞ்சாமல் சொல்!

நாரதர்

தில்லியிலும்
பஞ்சாபிலும்
நவகாளியிலும்
இனக் கலவரம்.

திருமால்

அப்படி யென்றால்—
நான் தொடங்கி வைத்த
ராம ராவண யுத்தம்
இன்னும் அங்கு
முடியவில்லை என்று சொல்!

நாரதர்

அதையேன்
கேட்கின்றீர் பிரபோ.
நாடெங்கும்
லங்கா தகனம்.

குழந்தைகளின் தலைகள்
அரும்புகளைப் போல்
கிள்ளப் படுகின்றன.
பாதை தோறும்
பாஞ்சாலிகள்
துகிலுரியப் படுகிறார்கள்.

திருமால்

எனது
ராமராஜ்யத்தைப்
புனருத்தாரணம்
செய்வதற்காக
அகஸ்திய முனிவரை
நானங்கு
அனுப்பி வைத்தேன்.

அவர்தாம்—
காந்தியாக
அங்கு
திரு அவதாரம்
செய்திருக்கிறார்.

அவர் அங்கே
என்ன செய்துகொண்டு
இருக்கிறார்?

நாரதர்

அவரையும் நேற்றுத்
தொழுகைக் கூட்டத்திலேயே
சுட்டுக் கொன்றுவிட்டார்கள் பிரபோ!

திருமால்

அநியாயம்!
அக்ரமம்!
நாரதா!
பூவுலகில்
கலிமுற்றி விட்டதா?

நாரதர்

காந்தியின் கொலை
உங்கள் பெயராலேயே
நடைபெற்றிருக்கிறது பிரபோ!

திருமால்

என்ன!

நாரதர்

கொன்ற கோட்சேயும்
ராம பக்தன் தான்!
சுடும்போது
'ராம்! ராம்!' —என்று
சொல்லித்தான் சுட்டான்.

காந்தியடிகளும்
'அரே ராம்! அரே ராம்!'—என்று
அலறியவண்ணம் தான்
துடித்து விழுந்தார்.
இரண்டு பேருமே
உங்கள் திருநாமத்தை
உச்சரிக்கத்
தவறவில்லை பிரபோ!

திருமால்

சிலுவையில் மரித்த
இயேசுவின் மீது
அறையப்பட்ட
ஒவ்வோர் இரும்பாணியும்
வடித்த
ஒவ்வொரு துளி இரத்தமும்
ஒரு கோடி மக்களைக்
கிறித்தவராக்கியது.

நபி நாயகத்தின் மீது
விழுந்த
ஒவ்வொரு கல்லும்
ஒவ்வொரு நாட்டைப்
பிறைக்குள் வளைத்து
இசுலாம் ஆக்கியது.

அது போல்—
காந்தி சிந்திய ரத்தம்
உலகத் தையே
ராம ராஜ்யம்
ஆக்கப் போகிறது!

நாரதர்

நாராயண!
நாராயண!

காட்சி 4

இடம்: வைகுந்தம், பூவுலகம்

காலம்: 1982

உறுப்பினர்: திருமால், திருமகள், கருடன்.

திருமால்

கண்ணே!
இன்று ஏனோ
இனம் புரியாத
இன்பக் கிளர்ச்சி
என்னை
ஆட் கொண்டிருக்கிறது.
இந்தப் பாற்கடல் கூட
அலையெழும்பிக்
கும்மாள மிடுகிறது.

நிலவு அழகானது
என்றாலும்
சித்திரை நிலவில்
தனிக் கவர்ச்சி
இருக்கிறதல்லவா?

அழகின்
அமுத வடிவமே!
இன்று—
ஏனோ உன்னை
ஆராதனை
செய்ய வேண்டும் போல்
இருக்கிறது.

திருமகள்

என்ன?
இன்று

பிருந்தாவன நினைவு
உங்களுக்குப்
பீரிட்டுக் கொண்டு
வருகிறது.

திருமால்

யாரங்கே?
கருடனை
வாயிலில் வந்து
நிற்கச் சொல்.

திருமகள்

எங்கே பிரபு?

திருமால்

பூவுலகிற்கு.

திருமகள்

என்ன?
பூவுலகிற்குத்
திடீர்ப் பயணம்.

திருமால்

தளிர்க் கொடியே!
என்னை
இறுகத் தழுவிக் கொள்!
கருடா!
கவனமாகப் போ!

மழை மேகத்தில் நுழைந்து
மாணிக்க வல்லியை
நனைத்து விடாதே!
பூ வுலகத்தில்
இறங்கும் போது
எச்சரிக்கையோடு இறங்கு.

அங்கே—
இரும்புக் கருடர்கள்
கண்ணை மூடிக்கொண்டு
வருவார்கள்.
விபத்தில் சிக்கிக் கொள்ளாதே!

திருமகள்

பிரபோ!
பூ வுலகம்
கண்ணுக்குப்
புலப்படுகிறது.
இது எந்த இடம்?

திருமால்

இது—
ஆஸ்திரேலியாக்
கண்டத்தின்
அமராபதி.
மெல் போர்ன்.

திருமகள்

இது என்ன..
மார்கழிப்
பனனைக் கூட்டம்.
பவளக் காவியுடை,

நீண்ட
சோளக் கதிரின்
சோவை போல்
பஞ்ச கச்சம்.
கீழ்க்காய் நெல்லிபோல்
காலில் சரச் சதங்கை.

நீண்ட கழுத்தும்
அடி வயிறுமே
உறுப்பாய்க் கொண்ட
நாரதத் தம்புரா.

அகல விரித்த
பூசணிப் பூப் போல்
கையில் தாளம்.
தாளகதி தவறாமல்
கண்களை மூடிக்கொண்டு
மெய் மறந்து
உணர்ச்சியில் கரைந்து
'அரே ராம! அரே கிருஷ்ண!'
என்று ஆடும்
ஆனந்தத் திருக் கூட்டம்.

திருமால்

இவர்கள்
ஆஸ்திரேலிய
வெள்ளைக் காரர்கள்.
என்னைத் தொழும்
பக்தி இயக்கம்
பாரத கண்டத்தை விட்டு
அலை கடலையும் கடந்து
ஆஸ்திரேலியாவிலும்
பரவியிருக்கிறது.

கருடா!
சற்று வேகமாகச் செல்.
இன்று—
உலகையே
நாம் வலம் வர வேண்டும்.

திருமகள்

பிரபோ!
அழகு கொலு விருக்கும்
பாரின்
பரந்த மார்பைப் பாருங்கள்.
கண் கொள்ளாக் காட்சி.
ஆயிரக் கணக்கான
சதுர மைலுக்கு
அகல விரித்த
பச்சைக் கம்பளம்.
கம்பளத்தின் நடுவே
நீலக் கொடிவேலைப்பாடு போல்
நீண்டு
நெளிந்து செல்லும் ஆறுகள்.

அப்பா!
எவ்வளவு
உயரமான கட்டிடங்கள்.
இங்கிருந்தே
வைகுந்தத்தைப்
பார்த்து விடலாம்
போலிருக்கிறதே!

திருமால்

திருவே!
இது தான்
உன் ஆட்சி
கொடி கட்டிப் பறக்கும்
அமெரிக்க ஐக்கிய நாடு.

வானுலகில்
குபேரன் ஒருவன்தான்.
இங்கு—
ஒவ்வொரு தெருவிலும்
ஒரு குபேரன்
குடியிருக்கிறான்.

இங்கு—
நமக்கெல்லாம்
மேலான
பெருந் தெய்வம்
ஒன்று இருக்கிறது.

திருமகள்

அது யார் பிரபோ?

திருமால்

டாலர் மகாதேவன்.

ஆக்கல்
அழித்தல்
அளித்தல்
ஆகிய முத் தொழிலையும்
பூ வுலகில்
இவன்தான் செய்கிறான்.

தேவாசுர யுத்தம்
நமக்குப் பொழுது போக்கு.
இஸ்ரேல்
அரபு யுத்தம்
இவனுக்குப் பொழுது போக்கு.

நாகாஸ்திரம்
பிரம்மாஸ்திரம்

பாசு பதாஸ்திரம்—என்று
நாம்
தேவர்களுக்குப்
போர்க் கருவிகள்
வழங்குவது போல்
இவனும்—
இவர்களுக்கு
அஸ்திரம் வழங்கும்
ஆண்டவன்.

திருமகள்

என்ன பிரபோ!
இவ்விடம்—
தாருகா வனம் போல்
காட்சியளிக்கிறது.
எங்கு பார்த்தாலும்
ரிஷிகள்... ரிஷிபத்தினிகள்...

திருமால்

தாரு காவனம்
அன்று கண்ணே!
இது—
அமெரிக்கப்
பிருந்தாவனம்!
சிகாகோ.

நீ காணும் காட்சி
ஆடவரும் பெண்டிரும்
ஆழ் நிலைத் தியானத்தில்
அமிழ்ந்திருக்கும்
அழகிய கண் விருந்து.

இவர்கள்—
என் அன்பு வெள்ளத்தில்
மிதக்கும்
அமெரிக்க ஆழ்வார்கள்.
ஜாஸ் இசையில்
காண முடியாத
இன்பத்தையும்
அமைதியையும்
எனது
வேணு கானத்தில்
காணுகிறார்கள்.

எனது
இராம ராஜ்யத்தின்
மேற்கு எல்லையிது.
(திருமாலின் முகம் பெருமிதத்தால்
மலர்கிறது)

திருமகள்

பிரபோ!
இந்த இடம்...
என் நினைவுக் கீற்று
விடியற் காலக் கனவு போலப்
பளிச்சிட்டு மறைகிறது.

வெள்ளி நுரைபொங்க
உங்கள் நாபிக் கமலம்போல்
சுழித் தோடும்
இந்த ஆற்றில் கூட
நாமிருவரும்
ஜலக் கிரீடை
செய்த நினைவு
எனக்கு வருகிறது.

மேகக் கூந்தலில்
மல்லிகைச் சரமாக்த் தொங்கும்
இந்த அருவிக் கரையில்
நாம் அருகருகே அமர்ந்து
இன்ப நினைவுகள்
இதய்த்தை
இதமாக வருட
கண்களாலேயே
உணர்ச்சி வலை பின்னிக்
களிப்படைந்த
நினைப்பும் வருகிறது.

திருமால்

தேவி!
இந் நினைவுகள்
உனது
பூர்வஜென்ம வாசனை.
நீ மிதிலையில் தளிர்விட்டுக்
கோசலத்தில் படர்ந்ததை
மறந்து விட்டாயா?

திருமகள்

பிரபோ!
இங்கே பாருங்கள்!
ஏதோ
போர் நடக்கிறது.

திருமால்

இந்த மாநிலம்
ஆசிய ஜோதி
அலகாபாத் சோஜா

நேரு பிற்ந்த
புனித மாநிலம்!
இது அலிகார்; அது லக்னோ.
இராம ராவண யுத்தம்
இவ் வூர்களில்
நாள் தோறும் நடைபெறும்
வீர விளையாட்டு.

திருமகள்

பிரபோ!
அங்கே—
வில்வேல் ஈட்டியுடன்
ஒரு பெருங் கூட்டம்
ஆர்ப்பாட்டம் செய்கிறதே!
நீங்கள் விட்டுச் சென்ற
வானரப் படையோ?

திருமால்

பஞ்ச சீலக் கொள்கையைப்
பாரில் பரப்பிய
ராஜரிஷி
அசோகன் ஆண்ட
அன்பு மாநிலம் பீகார்.
இம் மாநிலத்தைச் சேர்ந்த
*பராஸ் பிகாவில்
சம்பூக வதம்
பெரிய வேள்வியாகவே
நடத்தப் படுகிறது.

திருமகள்

பிரபோ!
நாம் கடந்து செல்லும்
இந்த ஆறுகள்...

---

* barasbhiga.

திருமால்

இது கோதவரி.

அன்னம்
ஒதுங்கக் கண்டபோது
நான் உன்னையும்,
அழகிய களிற்றின்
வாலைக் கண்டபோது
நீ என்னையும்
பார்த்துப் பார்த்துப்
புன் முறுவல்
பூத்த இடம்.

இது—
வான் பொய்ப்பினும்
தான் பொய்க்காத காவிரி!
இதன் நடுவில்
தெரிகிறதே
அந்தத் திருவரங்கம்
என் ஒய்வுக்காலத்
தங்கல் மனை.

திருமகள்

ஓ! இது—
தமிழகம்.
இராவணன் என்னை
இலங்கைக்குக்
கடத்திச் சென்றபோது
கண்ணீர்த் திரையோடு
கண்டு சென்றது
நினைவுக்கு வருகிறது.

திருமால்

இது விழுப்புரம்.
அது மண்டைக் காடு,

இவ் விடங்களிலும்
தேவாசுரப் போர்
நடை பெறுகிறது.

பெரிய மழைக்குப் பின்னும்
புகை மெதுவாக
அரும்பிக் கொண்டிருக்கிறதே
அந்த இடம்தான்
கீழ வெண்மணி.
அங்கே—
லங்கா தகனம்
இனிது நிறைவேறி
முற்றுப் பெற்றது.

திருமகள்

ஆகா!
எவ்வளவு
அழகிய கடற்கரை!
கண்ணுக் கெட்டிய தூரம்
நீலத் தண்ணீர்த் தகடு.
கரைக் காதலன்
இழுத்து அணைக்கிறான்.
அலைக் காதலி
நழுவி நழுவி ஓடுகிறாள்.

திருமால்

ஆமாம்!
அழகு இங்கே
அட்டாவதானம்
நடத்துகிறது
தேவலோகத்து
ஆடலரசி அரம்பை
காலை நீட்டி

மல்லாந்து படுத்திருப்பது போல்
நீண்ட
மாணிக்க மணற்கரை.
இடையிடையே
மயங்க வைக்கும்
மாளிகை மேடுகள்.

மாடியில் இருக்கும்
ஆயிரம் கண்களும்
ஆர்வத்தோடு பருக
எதிரில் வைத்த
அமுத கலசம் போல்
வாய்விரிந்த நீச்சற்குளம்.

குமரி மீன்களைக்
குளிப்பாட்டிக்
குளத்து நீரே
மதுச் சாறாக
மாறிக் கொண்டிருக்கிறது.

தேவி!
நம் வைகுந்தத்தையே
இப்படி
மாற்றி அமைத்துவிடலாம்
போலிருக்கிறதே.

இந்த
அழகுத் தொட்டிலின் பெயர்
கோவாக் கடற்கரை!
பாரத தேவியின்
முகத்தில் வைத்த
திருஷ்டிப் பொட்டு.

திருமகள்

போதும்!
உங்கள் வருணனை

வரம்பு மீறுகிறது...
பிரபோ!
அங்கு பாருங்கள்!
உங்கள் சக்ராயுதம்
பறப்பது போல்
வட்ட வட்டமான
சிறிய சிறிய
புகை மண்டலங்கள்.
மிதந்து வருகின்றன.

திருமால்

ஒன்று மில்லை!
என் பக்தன்
தன்னை மறந்து
என்னில் கலப்பதற்குத்
தன்னைப்
பக்குவப் படுத்திக் கொள்ளும்
வேள்வி.
இவன் வாயே
இவனுக்கு
யாக குண்டம்.
அடடா!
எங்கும்
ராம பக்தர்கள்!
எங்கும் ராமராஜ்...

திருமகள்

பிர போ!!!
அங்...

[சில ஹிப்பிகள் கழுத்தில் மாலை புரள, கைகள் வைகுந்தத்தை நோக்கி உயர்ந்திருக்க, கண்கள் பக்திப் பரவசத்தில் கரிந்துருக, தம்மை மறந்து, கோவாக் கடற் கரையையும் மறந்து, நிர்வாணமாக ஆடிக்கொண்டும் அணைத்துக்கொண்டும், அணைத்துக் கொண்டும் ஆடிக் கொண்டும் வருகிறார்கள். 'அரே ராம! அரே கிருஷ்ண!' என்ற முழக்கம் விண்ணைப் பிளக்கிறது. அல்லி தாமரையில் புதைகிறது. அவசரமாகத் திருமகள் கண்களைப் பொத்திக் கொள்கிறாள். அரே ராம! அரே கிருஷ்ண!!]

விளக்கக் குறிப்பு

ஓர் இரங்கற்பா

கனடா நாட்டின் விளையாட்டு வீரரான டெர்ரி போக்ஸ் புற்று நோயால் 22வயதில் தமது வலது காலை இழந்தார். புற்று நோய்த் தீவிர ஆராய்ச்சிக் காக 20லட்சம் டாலர் நிதி, திரட்ட ஒரு பெரு நடைத் திட்டத்தில் ஈடுபட்டார். கனடாவின் கிழக் குக் கரையிலிருந்து மேற்குக் கரைக்கு, 5,300 மைல் தூரம் செயற்கை வலது காலுடன் நடந்து சென்று நிதி திரட்டுவதுதான் அத்திட்டம். ஆறுமாதத்தில் 3339 மைல் தூரம் தான் நடக்க அவரால் முடிந்தது. அதற்குள் புற்று நோய் அவர் நுரையீரலைப் பாதித்து வழியிலேயே இறந்து விட்டார். ஆனால் அவர் திரட் டிய நிதி 40லட்சம் டாலருக்குமேல் சேர்ந்துவிட்டது, இன்னும் குவிந்து கொண்டிருக்கிறது.1977 இல் மறைந்த அவ்விளைஞரின் வீரச்செயல், மனித குலத் தீற்காக ஆற்றிய மாபெரும் சாதனை.

உடைந்த குழல்

லியாண்டர் (Leander-Hero of sestos) என்ற வீர இளைஞன் நாள் தோறும் நள்ளிரவில் கிரேக்கக் கடலை (Hellespond) நீந்திக் கடந்து, அக்கரையில் கன்னிமாடத்தில் இருந்த காதலியைச் சந்தித்து மீள் வது வழக்கம். பின்னர்க் கடவுளின் சாபத்தால் நடுக் கடலில்முழ்கி இறந்தான். உணர்ச்சிமிக்க காதலுக்கு இவன் தீரச் செயல் எடுத்துக் காட்டாக ஐரோப்பிய இலக்கியங்களில் குறிப்பிடப் பட்டுள்ளது. மகாகவி பைரன் கிரேக்க நாட்டுச் சுற்றுப் பயணத்தை மேற் கொண்ட போது, கிரேக்கக் கடற்கரையை அடைந் ததும் லியாண்டரின் நினைவு வந்து உணர்ச்சி வசப்பட்டுக் கடலில் குதித்துத் தானும் அதை நீந்திக் கடந்தான்.

ஈரோடு காமராசர் மேல்நிலைப் பள்ளியில் தலைமை யாசிரியராகப் பணியாற்றும் முருகு சுந்தரம் தமிழ் இலக்கிய மேடைதோறும் தம் கவிதைகளை மெல்லிய பூங்காற்றாய் வீச வைத்த புதுமைக் கவிஞர். பாவேந்தர் 'குயிலி'லும் சுரதாவின் கவிதை இதழ் களிலும் தன்னை அறிமுகப் படுத்திக்கொண்ட முருகு 'கடைதிறப்பு' என்னும் தொகுதி மூலம் கவிதையின் நல்லழகை எவரும் எளிதில் வசப்படும் வகையில் அறிமுகப் படுத் தியவர். 'பனித்துளிகள்'— தமிழக அரசின் பரிசுபெற்ற இவரது மற்றொரு தொகுதி. பாவேந்தரின் பரம்பரையைச் சேர்ந்த இவர் பாவேந்தரைக் கண்டும் கேட்டும் அறிந்த நிகழ்ச்சிகளைப் 'பாவேந்தர் நினைவு'களாக்கி யுள்ளார்.

'பாரதிதாசனைப்போல் எழுதுவது தான் என் முதற்குறிக்கோள். சுரதாவின் புதிய உத்திகள் இளங் கவிஞனாகிய என்னைப் பெரிதும் வசீ கரித்ததுண்டு. இன்று - நான் நானாக எழுது கிறேன்' என்கிறார் முருகுசுந்தரம்.

இவரது முதல் புதுக்கவிதைத் தொகுதி தீர்த்தக் கரையினிலே'